Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 20 சனிக்கிழமை (02.07.2011) | பக்கங்கள் 16 | ஓசை - 277



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கருக்கு ஜெர்மனியின் விருது

12



மக்களோடு பணியாற்றியவர் ஆயர்

05



கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தியது மக்கள் வங்கி

04



சிங்கப்பூரில் வலைப்பந்தாட்டம் தர்ஷினியும் பயணம்

06

## எனக்கு எதிராகச் சதி குமுறுகிறார் றெமிடியஸ்

### வலுக்கிறது உட்கட்சிப் பூசல்

(யாழ்ப்பாணம்)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தன்னை வெளியேற்றுவதற்கு திரைமறைவில் சதி செய்யப்படுவதாக யாழ். மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவர் முடியப்பு றெமிடியஸ் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை எதிர்கட்சி உறுப்பினர்களினால் பின்னப்படும் சதிவலையில் தான் விழமாட்டேன் என்றும் தன்னைத் தமிழ்த் தேசியக் (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் வசந்தம் குவியும் நிதியுதவி

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கில் மேற்கொள்ளப்படும் வடக்கின் வசந்தம் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கி 285 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இதற்கு முழுமையாக 317775 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

இதன் மூலம் வடக்கில் கிராமப்புறங்களுக்கான வீதி 200 கி.மீட்டரும் 100 நீர்ப்பாசனக் கால்வாய்களும் புனரமைக்கப்படவுள்ளன.

## இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் உயர்கல்வி

(கொழும்பு)

இந்திய - இலங்கை நிதியத்தின் அனுசரணையில் ஒரு வருட தத்துவமானி கற்கை நெறியை இலங்கை மாணவர்கள் இந்தியாவில் மேற்கொள்ள முடியும் என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது

இதன்படி சமூக விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம் மற்றும் இந்திய - இலங்கை உறவுகள் ஆகிய துறைகளில் இந்தக் கற்கை நெறிகளை புலமைப் பரிசில் திட்டங்களின் மூலம் மேற்கொள்ள முடியும்

இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் ஜுலை 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், இந்திய இலங்கை நிதியம், 36.38 காலி வீதி, கொழும்பு 3, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் கோரியுள்ளது.



# யாழ்.கரையோரத்தில் கடல் தாவர உற்பத்தி

### ஜப்பானிய நிதியுதவியுடன் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவின் கடற்கரையோரங்களில் பயன்தரும் கடற்தாவரங்களை வளர்க்கும் புதிய செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஜப்பானிய அரசின் நிதி உதவியுடனும், தொழில்நுட்ப ஆலோசனையுடனும் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் யாழ்.கரையோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்செயற்திட்டத்தின் முதற்கட்டமாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - ஜப்பான் நாட்டு பிரதிநிதிகளுடன் கடற்தாவரங்களை பயிரிடும் செயற்திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது,

இவ்வாறான கடற்தாவரங்களை உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு ஒரு மாதத்துக்கு தலா இருபது ஆயிரம் ரூபா இலாபம் ஈட்டக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பிட்ட ஜப்பான் நிறுவனத்துடன் இலங்கை கடற்றொழில் அமைச்சின் ஆராய்ச்சிப் பிரிவு (என்.ஏ.ஆர்.ஏ.) இணைந்து இத் திட்டத்தை யாழ்.குடாவில் செயற்படுத்தவுள்ளது.

புங்குடுதீவு, வேலணை, காரைநகர், வலைப்பாடு மற்றும் கிராஞ்சி ஆகிய பகுதியின் கடற்கரைப் பகுதிகள் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஜப்பான் பிரதிநிதிகள் ஏற்கனவே இப்பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மிக விரைவில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

## பணத்துக்காகவே போராட்டம் ஈழத்தமிழர்களுக்காக அல்ல

### தமிழக அறிஞர் பெரியார் தாசன்



ஈழத் தமிழர்களுக்காக இந்தியாவில் போராட்டம் நடத்தும் தமிழ் தலைவர்கள் பணத்திற்காகவே போராட்டம் நடத்துகின்றனர் என இந்தியாவிலிருந்து இலங்கை வந்துள்ள பெரியார்தாசன் என்றழைக்கப்படும் பேராசிரியர் அப்துல்லா தெரிவித்தார்.

இன விடுதலை, சுதந்திரம் என்றெல்லாம் (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் ஆட்சி ஈழத்தமிழர்களுக்காகவே உருவாக்கப்பட்டதாம் - சிறிதரன் எம்.பி.சொல்கிறார்

(கிளிநொச்சி)

தமிழகத்தில் ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சி ஈழத்தமிழர்களுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய வாய்ப்பான சூழல் பொருந்தி வரும் நிலையில், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை அரசாங்கம் பயன்படுத்திவிட அனுமதிக்கக்கூடாது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

வட்டக்கச்சி மாயவனூர் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்களைச் சந்தித்து அவர் கலந்துரையாடினர். அவர்கள் மத்தியில் உரையாற்றிய சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் களம் சூடு பிடித்திருக்கின்றது.பல்வேறு கட்சிகளும் குறிப்பாக அரசாங்க கட்சி தமிழர் பிரதேசங்களில் தாங்கள் வென்றுவிடவேண்டும் என்பதற்காக முனைப்போடு களம் இறங்கியிருக்கின்றது.

தங்களுடைய ஊர்களை தாங்களே நிர்வகிக்கின்ற அபிவிருத்தி செய்கின்ற சிறிய அலகுகளாக பிரதேச சபைகள் இருக்கின்றன. என்றாலும் இத் (15ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்செயல் முறைப்பாட்டுப் பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யவென தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்தின் அலுவலகமொன்று நேற்று முதல் யாழ்.செயலகத்தில் இயங்கி வருகிறது.

யாழ்.செயலகத்தில் தேர்தல்கள் அலுவலகத்திற்கு மேல் மாடியில் இரண்டாவது அறையில் இவ் அலுவலகம் செயற்பட்டு வருகின்றது.

உதவித் தேர்தல் ஆணையாளர், உதவிப் பொலிஸ் அதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்று இச்செயலகத்தில் கடமையில் ஈடுபட்டுள்ளது.

இச்செயலகத்தின் (15ஆம் பக்கம் பார்க்க)

## வியாபாரி மீது கத்தி வெட்டு படுக்கையறையில் பயங்கரம்

உடுத்துறை தாளையடிப் பகுதியில் நேற்று அதிகாலை பலசரக்கு கடை வியாபாரி ஒருவர் உறக்கத்திலிருந்த வேளை இனம்தெரியாதோரின் கத்திவெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். அதிகாலை 2.00 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஆனந்தராசா ஜெயரூபன (வயது-28) என்பவரே கத்திவெட்டுக்கு இலக்கானார்.

குறித்த நபர் தலைப்பகுதியில் கத்தியினால் வெட்டுண்டு படுகாயமடைந்த நிலையில் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(பா)

## சுவிஸ் மாநகரசபைத் தேர்தலில் யாழ்.தமிழ்மகன் வெற்றி



சுவிற்சர்லாந்தின் லவுசான் மாநகரசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் தம்பிப்பிள்ளை நமசிவாயம் அமோக வெற்றியீட்டியுள்ளார்.

இவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அண்மையில் இடம்பெற்று முடிந்த தேர்தல் மூலம் இம்மாநகர சபைக்கு 100 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் நமசிவாயம் 18ஆவது இடத்தில் உள்ளார். வெற்றி பெற்ற அனைவரும் மாநில ஆளுனர் சில்வியான் கிளையன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். லவுசான் மாநகரசபை உறுப்பினராக நமசிவாயம் இரண்டாவது தடவையாக தெரிவாகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர் பிணக்குகளுக்கு சுமூகதீர்வு

## யாழ்.தொழில் திணைக்களம் புதிய ஏற்பாடு

(ஊர்காவற்துறை)

அண்மைக்காலமாக யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் தொழிலாளர் தகராறுகளைச் சுமூகமாகத் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட மட்டத்திலான கலந்துரையாடல் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இக்குழு தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளில் இவ்வாரம் முதல் செயற்பட ஆரம்பிக்கவிருக்கிறது.

தொழிலாளர்களும், தொழில் தருநர்களும் மனம்விட்டுப் பேசி ஒரு சுமூகமான தீர்வை எட்டுவதே தொழில்திணைக்களக் கலந்துரையாடல் குழுவின் இலக்கு.

இவ்வாறு நேற்று தொழில் திணைக்களத்தில் இடம்பெற்ற தொழில்திணைக்களக் கலந்துரையாடல் குழு அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் தொழிலாளர், தொழில தருநர்களுக்கிடையிலான பிரச்சினைகளைச் சுமூகமான வழியில் கையாளும் நோக்கோடு இக் கலந்துரையாடல் குழு அமைக்கப்படுவதாகவும், தொழிலாளர்கள், தொழில் தருநர்கள், தொழில திணைக்களப் பிரதிநிதிகள் இக் குழுவில் உள்ளமையால் மிக இலகுவாகத் தமது பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு இச் சமூகக் கலந்துரையாடல் குழு வழி அமைக்கும் என தெரிவித்தார்.

மேற்படி சமூகக் கலந்துரையாடல் குழு நேற்று மு.ப. 11.30மணிக்கு தொழில்திணைக்கள அலுவலகத்தில் இடம் பெற்ற தொழிலாளர், தொழில் தருநருக்கான கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

இத் தொழில்திணைக்கள சமூகக் கலந்துரையாடல் குழுவின் தலைவராக மாவட்ட உதவி தொழில ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரனும், செயலாளராக ஐயா சச்சிதானந்தம், பொருளாளராக எஸ்.லோகசிவமும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் தொழில் தருநர் சார்பில் பிரதிநிதிகளாக கே.பூரணச்சந்திரன், கே.செல்வராசா, எஸ்.செல்வநாயகம் ஆகியோரும், தொழிலாளர சார்பில் பிரதிநிதிகளாக எம்.குலசிங்கம், அ.கொய்சன், கி.சுதாகரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (27)

# ஆன்மீக விரிவுரை

(பருத்தித்துறை)

சின்மையா மிஷன் சுவாமிகளின் ஆன்மீக விரிவுரைகள் வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் யூலை மாதம் முதல் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணி வரை வதிரி திரு இருதயக் கல்லூரியிலும், 10.30 முதல் 11.30 வரை அல்வாய் சின்னத்தம்பி விததியாலயத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரை வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

7 ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணிவரை கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலையிலும் 10.30 முதல் 11.30 வரை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திலும் 8 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் 9.30 மணி வரை கம்பர்மலை வித்தியாலயத்திலும், 9.45 முதல் 10.45 மணி வரை தொண்டமானாறு வீரகத்தி மகாவித்தியாலயத்திலும் 11 மணிமுதல் 2 மணிவரை சந்நிதியான் ஆச்சிரமத்திலும் நடைபெறவுள்ளது.

இக்காலப் பகுதியில் சுவாமி வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் தங்கியிருப்பார். பொதுமக்கள் 0212263743 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# ஆங்கில தின போட்டிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய ஆங்கில தின போட்டிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டிகள் வட இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பார்த்து எழுதுதல் தரம் 3 முதல் 11 வரையும், சொல்வதெழுதுதல் தரம் 6 முதல் 11 வரையும், உறுப்பெழுத்து, வாசிப்பு ஆகியன தரம் 3 முதல் 05 வரையும், பேச்சு தரம் 3 முதல் 11 வரையும் நடை பெறவுள்ளது.

மாணவர்கள் உரிய நேரத்திற்கு வருகைதருமாறு வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (109)

# சாவகச்சேரியில் வதிவிடச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தரம் 05 மாணவர்களுக்கான வதிவிடச் செயலமர்வு இடம்பெறவுள்ளது. வடமராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு ஒன்று சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இச் செயலமர்வில் வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட மாதிரிப் புலமைப்பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற முதல 5 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு 12 வலயங்களிலும் 60 பேரைக்கொண்ட மாணவர் குழாமிற்கு இச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பாடவிதானம் சம்பந்தமான பொருட்களையும், தங்குவதற்கு உகந்த முறையில் அவசியமான பொருட்களையும் கொண்டுவருவதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் தேவையற்ற பொருட்கள், பணம், கைத்தொலைபேசி என்பவற்றை தவிர்க்குமாறும், மாணவர்களின் பாதுகாப்புக் கருதி பெற்றோர் அச்சம் கொள்ளத்தேவையில்லை எனவும் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (109)

# பாலர் விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

வல்வை விக்கினேஸ்வரா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உதயசூரியன் உல்லாசக கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வல்வை விக்கினேஸ்வரா சனசமூக நிலையத் தலைவர் தி.ஜெகதீஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.தில்லைநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்.சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோ.பரமேஸ்வரி, கிராம சேவையாளர் எஸ்.தவநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (109)


# மனோதத்துவ வைத்தியம்

## General Psychotheraphy

**யாழ்ப்பாணத்தில் 05.07.2011 தொடக்கம் 10.07.2011 வரை**

உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P.ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

தொடர்புகளுக்கு :-
கமல் ரூ ரிஸ்ற் இன்,
392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)
தொ.பே.இல - 0214922403
Hotline - 0719315664, 0777569205

(C/791)


# கரைச்சிப் பிரதேச சபை அறிவித்தல்கள்

## கட்டட அனுமதி

**1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரச திணைக்களங்கள், அதிகார சபைகள், அரச, அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இச்சபை எல்லைக்குட்பட்டோர் தங்களது ஆதனத்தில் புதிதாகக் கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினைத் திருத்துவதாயினும் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தி அடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்திக் கட்டட அனுதியைப் புதுப்பிக்கவேண்டும்.

அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பூர்த்திசெய்து உரிய கட்டணங்களைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள், மதில்கள் தொடர்பாக அரச திணைக்களங்கள், அதிகார சபைகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆதனச் சொந்தக்காரர் மீது குறித்த சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## சூழல் பாதுகாப்பு உரிமம்

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2008 ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'இ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளைப் பிரதேச எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை / வியாபாரத்தினை நடத்துபவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்த செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி இவ் உரிமத்தினை பெற்றுக்கொள்ளலாம். இவ் உரிமம் பெறாது மேற்படி தொழில்கள்/வியாபாரம் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

## விளம்பரம், பெயர் பலகைகளுக்கான அனுமதி – 2011

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்குப் பிரதேச சபையிடம் அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி பெறாதுள்ள விளம்பரங்கள் பிரதேச சபையால் எவ்வித முன் அறிவித்தலுமின்றி 15.07.2011 இற்குப் பின் அகற்றப்படும். வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத தமது வர்த்தக நிலையம் தொடர்பான பெயர் பலகை ஒன்று மட்டும் காட்சிப் படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர் பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர் பலகைகளுக்கு பிரதேச சபையில் அனுமதி பெறவும். அவ்வாறு அனுமதி பெறாத பெயர் பலகைகள் பிரதேச சபையால் அகற்றப்படும்.

மேலும், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தமது கடை கட்டட எல்லைக்குள்ளேயே பொருட்களை காட்சிப்படுத்தவோ களஞ்சியப்படுத்தவோ முடியும். அவ்வாறு அல்லாது கடையின் வெளிப்புறத்திலோ வீதிக்கு அருகிலோ பொருட்களைக் காட்சிப்படுத்தவோ, களஞ்சிப்படுத்தவோ முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன், இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

## நடைபாதை வியாபாரம்

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மீறி நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது பிரதேச சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அப்பொருட்களும் பிரதேச சபையால் கையகப்படுத்தப்படும்.

கு.தவசோதி
செயலாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C/793)

உருவத்தில் மனிதனாகவும் குணத்தில் மிருகமாகவும் இருக்கக் கூடாது மனிதத்தன்மையில் இருந்து தெய்வத்தன்மை பெறவேண்டும் அது முடியாவிட்டால் மிருகத்தன்மைக்காவது போகாமல் இருக்க வேண்டும்.

- வாரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தமிழ்க் குறைபாடுகளின் கூட்டு!

நாடாளுமன்றங்கள், சட்டசபைகள், உள்ளூராட்சி மன்றங்களில் வாக்குவாதம் காரசாரமடைவதும், கைகலப்பு ஏற்படுவதும் புதிய செய்தியல்ல. பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் அடிதடி நடைபெற்றதை அறிந்திருக்கிறோம். தமிழக சட்டசபையில் மைக்குகள், கதிரைகளால் அடித்து, சேலையைப் பற்றி இழுத்தது வரை கேள்விப்பட்டிருக்கிறோம். இலங்கை நாடாளுமன்றமும், சட்டையை மடித்து விட்டுக்கொண்டு சண்டைக்கு இறங்குகிறவர்களைக் கொண்டதுதான்.

ஆனால், நாம் அறிந்திருக்கும் இந்த அடிதடிகளெல்லாம் ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் நடைபெற்றவையாகத்தான் இதுகாலவரை இருந்திருக்கிறது. மக்களுக்குச் சேவை செய்யவென மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ளே, கையில் கிடைத்தவற்றையெல்லாம் எடுத்து வீசிச் சண்டையிட்டுக் கொள்ளும் விசித்திரத்தை உலகுக்கு எடுத்துக் காட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மட்டுமே முடிந்திருக்கிறது!

கொள்கைரீதியாக ஒன்றுசேர்ந்து, மக்கள் நலனை மட்டும் னதில் வைத்துச் செயற்படும் கட்சிகளுக்கெல்லாம் ஒரு போதும் இயலக்கூடிய சாதனை அல்ல இது! மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியில் ஒருமித்த கருத்துக் கொண்டு ஆட்சி மன்றங்களுக்கு வரும் எவராலும் இப்படித் தங்களுக்குள்ளேயே குஸ்தி போட்டுக் கொள்ளமுடியாது. வேறு வேறு சுயலாபக் காரணங்களை மனதில் வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்றிப் பிரதிநிதிகளாகிக் கொண்டிருக்கும் நபர்களுக்கே இப்படி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதும் சாத்தியம்!

மக்களை அழிக்கும் போருக்கு வழிகாட்டியவர்கள், மக்களுள் சிலரை துரோகிகள் என முத்திரை குத்திக் கொலை செய்வித்து வழிகாட்டியவர்கள், கதிரைகளைப் பிடிக்கும் ஒரே நோக்கத்திற்காக மக்களை ஏமாற்றவும் வதைபட வைப்பதிலும் வழிகாட்டியவர்களே சபை அமர்வில் தங்களுக்குள்ளேயே தண்ணீர் போத்தல்களால் எறிந்து சண்டை போட்டுக் கொள்வதற்கும் வழிகாட்டியிருக்கிறார்கள்.

வவுனியா நகரசபைக்கு ஆளும் கட்சியாகத் தேர்வு செய்யப்பட்ட கூட்டமைப்பு, ஒன்றரை வருடங்களாகத் தலைவரைத் தெரிவுசெய்ய முடியாமல் தங்களுக்குள்ளேயே கூடிக்கூடி அடிபட்டு, நகரசபையே இயங்காமல் அனைத்துப் பணிகளையும் முடக்கியது.

வவுனியாவில் ஆளும்கட்சியாக வந்து அந்தப் பாடு என்றால், யாழ். மாநகரசபையில் எதிர்க்கட்சியாக வந்த கூட்டமைப்பினர் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளுக்காகப் போராடுவதற்குப் பதிலாக, தங்களுக்குள் யார் தலைவர் என்பதற்காக சபைக்குள்ளேயே கட்டிப் புரளாத குறையாக கையில் கிடைத்ததால் அடித்துச் சண்டை போட்டுக் கொள்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் யாழ். மாநகரசபையில் கூட்டமைப்பு காட்டியிருக்கும் முன்னுதாரணம், அவர்களது அரசியலும் வெற்று முழக்கங்களும் உணர்ச்சிகரப் புறணிகளும் எதை ஒரே நோக்கமாகக் கொண்டவை என்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது.

ஆளும்கட்சியினர் ஏன் கூடுதல் வாக்கு எடுத்தவரை முதல்வராக்கவில்லை என்று உணர்ச்சி பொங்கக் கேள்வி எழுப்பத் தெரிந்தவர்களுக்கு, தங்களுக்குள் கூடுதல் வாக்கு எடுத்தவரைத் தலைவராக்க முடியாமல் கட்டிப் புரளுகிறார்கள். எல்லாப் பிரச்சினைகளையும் விட்டுவிட்டுத் தங்களில் யார் தலைவர் என்று தாங்களே அறிந்துகொள்ள ஒருவரையொருவர் அடித்துக்கொள்கிறார்கள்.

இது கூட்டமைப்பின் அந்தரங்க நோக்கத்திலுள்ள பிழையால் ஏற்படுவதுதான். மக்களுடைய அவலங்களையும் கோபங்களையும் தங்களது அரசியல் இருப்புக்கும் கதிரைகளுக்காகவும் பயன்படுத்திக் கொண்டிருப்பதே அந்தப் பிழை! பகை வெறுப்பை வளர்த்து விட்டுக்கொண்டு உணர்ச்சியரசியல் செய்வதன் விளைவாக, மக்களுக்காகச் செய்யவேண்டிய கடமைகள் பற்றிய எண்ணமே இல்லாமல் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளவே ஆட்சி மன்றங்களுக்குச் செல்வது என்று ஆகிவிட்டது! மேலிருந்து கீழ்வரை கூட்டமைப்பின் எல்லா மட்டத்திலும் இதுவே பிரச்சினை!

- ஆசிரியர்

# கடந்தவருட ஆசிரிய நியமனத்தில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை கடந்த வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான விகிதாசாரம் 18:1 என்ற வீதத்தில் வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த நிலை கடந்த 2005 ஆம் ஆண்டு 2:1 என்ற நிலையில் காணப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சேவைக்கு கடந்த வருடம் 3ஆயிரத்து 238 பேர் இணைத்துக் கொள்ளப் பட்டார்கள். இதில் 410 பேர் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்க தெரிவு செய்யப்பட்டார்கள். போட்டிப் பரீட்சையின் மூலம் 174 பட்டதாரி ஆசிரியர்கள் கடந்த வருடம் இணைத்துக் கொள்ளப்பட்டதாக நிதியமைச்சின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவைக்கென 235 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 200 அதிகாரிகள் நீண்டகாலத்தின் பின்னர் தரம் -1 இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாக நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ஊடகவியலாளரை தாக்கியவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளரை தாக்கிய நபரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸார் நேற்று முன்தினம் சம்பவ இடத்துக்குச்சென்று சாட்சியங்களை பதிவு செய்ததுடன் குறித்த நபரை கைது செய்து நேற்றையதினம் கிளிநொச்சி நீதிபதி செ. சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் செய்திகள் தொடர்பாக தவறுகள் இருப்பின் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யலாமே தவிர செய்தியாளர் மீது தாக்குதல் நடத்துவது குற்றமாகும் எனவும் அவர் எச்சரித்தார். (110)

## நற்கருணை வழிபாடு

(ஆனைக்கோட்டை)

மன்னார் மடுமாதா உற்சவத்தை முன்னிட்டு நவாலி சென்பீற்றர்ஸ் ஆலயத்தில் இன்று காலை நற்கருணை வழிபாடும் திருப்பலிப்பூசையும் இடம் பெறவுள்ளது. அத்துடன் மாதாவின் திருச்சொரூப பவனியும் வீதியுலா வலம் வரவுள்ளது. (104)

## மக்களின் வாழ்க்கை நிலையை திரட்டும்பணியில் ஆசிரியர்கள்

(வவுனியா)

வடமாகாணத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலைபற்றிய தகவல்களை திரட்டுவதற்காக ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இந்த வகையில் வவுனியா மாவட்டத்தின் இரண்டு வலயங்களிலிருந்தும் 412 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்குரிய பயிற்சி வகுப்புக்கள் வவுனியாவிலும் புளியங்குளத்திலும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வந்துள்ள அதிகாரிகளினால் பயிற்சிகள் நடாத்தப்படுகின்றது. வவுனியா தெற்கு வலயத்திலிருந்து 353 ஆசிரியர்களும், வவுனியா வடக்கு வலயத்திலிருந்து 62 ஆசிரியர்களும் இந்த விபர திரட்டலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த பணியினை முழுமையாக பூர்த்தி செய்பவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப் படவுள்ளது. வாழ்நிலை தொடர்பான தகவல்களை திரட்டுதலும், புள்ளிவிபரங்களை பெறுதலுமே நோக்கமாகவுள்ளது. சனத்தொகை தொடர்பான புள்ளிவிபரமும் இதில் அடங்கியுள்ளது.(39)

## மூன்று கிலோவிற்கு அதிக போலி நகைகளை அடைவு வைத்தவர்கள் சிக்கினர்

(கொழும்பு)

மத்திய மாகாணத்திலுள்ள 72 வங்கி கிளைகளில் 423 பவுண் (மூன்று கிலோவுக்கும் அதிகமாக) போலி நகைகளை அடகு வைத்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த மூன்று சந்தேக நபர்களை அலவத்துகொடை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் தொடர்ச்சியாக இந்த ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வங்கிகளில் அடகு வைத்திருந்த தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவை மூன்று கிலோவும் 300 கிராமுக்கும் அதிக எடைவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நேற்று கண்டி பிரதான நீதிவான் நீதிமன்றம் முன் ஆஜர் செய்யவுள்ளதாக அலவத்துகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பளைப்பகுதியில் 145 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றத்துக்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதியினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த குற்றவாளிக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடுழிய சிறைத்தண்டனையுடன் 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (110)

## வலிவடக்கில் இரு வீதிகள் தார் ஊற்றப்பட்டு புனரமைப்பு

(தெல்லிப்பளை)

வலிவடக்கு பிரதேச செயலக பிரிவில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட சுமார் 794 குடும்பங்கள் தம்மை பதிவு செய்துள்ளனர்.

மீளக்குடியமர பதிவு செய்யப்பட்ட குடும்பங்களில் சுமார் 500 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் குடியிருப்பாளர்களின் 32 கிணறுகள் இறைத்து சுத்தம் செய்யப்பட்டும் மேலும் சேதமுற்ற நிலையில் காணப்படும் கிணறுகளை திருத்தி அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கிராம அலுவலர் தெரிவித்தார்.

இதேவேளை இரண்டரை கிலோமீற்றர் தூரமான தந்தை செல்வா வீதியும் சந்தைவீதியும் தற்போது தார் உற்றப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வைத்தியசாலைக் குறைகளை நிவர்த்திசெய்து தரக்கோரிக்கை

(யாழ். நிருபர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இடவசதி போதாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே வெளிநோயாளர் பகுதி கட்டிடத்தை விஸ்தரிக்கவேண்டுமென காரைநகர் வைத்தியசாலை உதவி வைத்திய அதிகாரி எஸ். சுவாமிநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைநகர்ப் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றபோதே அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவிடம் இக்கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

வைத்திய அதிகாரி தங்கும் விடுதி மற்றும் தாதியர் விடுதி ஒன்றும் அமைக்கப்படவேண்டும். இங்குள்ள மருத்துவ மாதுக்கான விடுதி சேதடைந்துள்ளமையால் அதனையும் மீள அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சிற்றூழியர் மற்றும் தாதியர்களுக்கான ஆளணிப்பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்களுக்கு நிறைவான சேவையை வழங்க முடியாதிருப்பதாகவும் ஆளணி வெற்றிடங்கள் விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (12)

## இலவச கற்கைநெறி

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பாடவிதானங்களில் ஒன்றாக அமைகின்ற கண்டிய நடனகற்கை நெறியின் இரண்டாவது பிரிவின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 09ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இல 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலவசமாக நடத்தப்படுகின்ற இக்கற்கைநெறியில் இணைந்து பயில விரும்பும் ஆர்வமுடையோர் எதிர்வரும் 07ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தங்களது பெயர் விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## கிராமிய மக்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்த உதயமானதே மக்கள் வங்கி

### வடபிரதேச மக்கள்வங்கி முகாமையாளர்



(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியானது தனது பொன் விழாவைக் கொண்டாடும் இத்த ருணத்தில் 13மில்லியன் வாடிக்கையாளர்களை இணைத்துள்ள நிதி நிறுவனமாகவும் அதிக இலாபத்தை ஈட்டிய வங்கியாகவும் திகழ்கிறது. வாடிக்கையாளர்களுடன் வங்கி ஊழியர்கள் பழகும் விதமும் விரைவான செயலாற்றலுமே இந்த இலக்கை எட்ட வைத்துள்ளது.

இவ்வாறு மக்கள் வங்கியின் யாழ்ப்பாண பிரதேச முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார். மக்கள் வங்கியின் பொன்விழாக் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமிய பொருளாதாரம் மற்றும் கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு 1961இல் மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. இக்காலப் பகுதிக்குப் பின் இந்த நாட்டில் வங்கித்துறை மற்றும் நிதித் துறையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது.

கடந்த 50 ஆண்டுகளில் எல்லா தசாப்தங்களையும் ஒப்பிட்டு பார்க்குமிடத்து வாடிக்கையாளர்களுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் ஆற்றிய பங்கிற்காக 2005 ஆம் ஆண்டின் பின்பே மக்கள் வங்கிக்கு கிடைக்கக்கூடிய அரச அந்தஸ்து சரியான முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் மக்கள் வங்கிக் கிளைகள் இந்த தசாப்தத்திலேயே ஒருங் கிணைந்த கணினிமயப்படுத் தப்பட்டது.

2010ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வங்கித்துறையில் புகழ்பெற்று "அதி சிறந்த வங்கி" என்ற பெயரையும் பெற்றது. சேமிப்பு வைப்பிலும் அடகுத் துறையிலும் பலதரப்பட்ட கடன் வழங்குதலிலும் "வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீண் டும் கட்டியெழுப்புதல்" என்ற திட்டத்தின் கீழ் நிதி வழங்கு வதிலும் சிறந்த வங்கியாக மக்கள் வங்கி செயற்படுகின்றது. (கா)

## சட்டவிரோத மதுபானம்; தண்டம் விதித்தது நீதிமன்று

(முரசுமோட்டை)

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்ட, சட்ட விரோத மதுபானம் வைத்திருந்த மூவருக்கு தண்டப் பணம் அறிவிடப்பட்டது.

கிளிநொச்சி, விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த மேற்படி மூவரும் 5250மி.லீ,1500மி.லீ, 930மி.லீ மதுபானம் வைத்திருமைக்காக தலா 20 ஆயிரம்,10 ஆயிரம்,7000 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டு எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டனர் (110)



யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அண்மையில் நடத்திய சமூக சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வில் ஆன்மீ எழுத்தாளரும் வில்லிசைக் கலைஞருமாகிய சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி (அலென்ரின்) சமூக திலகம் விருது சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நிற்பதையும் காணலாம்.

## தகவல் திரட்டும் பயிற்சி வகுப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிதெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் வாழ் நிலத்தகவல்கள் தொடர்பான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இப் பயிற்சி வகுப்பில் கரவெட்டிக் கோட்ட கல்வி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 92 ஆசிரியர்கள் கலந்து கொள்கின்றனர்.

நேற்று ஆரம்பமான இப் பயிற்சி வகுப்பு இன்றும் நடைபெறவுள்ளது. இதில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை விட கிராம அலுவலர்களும் கலந்துகொள்கிறார்கள்.

இவர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த புள்ளிவிபரத் திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டது. (109)

## கனகசெந்தி கதாவிருதுக்கு 4 சிறுகதைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டத்தினால் கனகசெந்தி கதா விருதுக்காக யூன் 2009 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் ஈழத்தில் வெளிவந்த சிறுகதைகளில் சிறந்த 4 சிறுகதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் செங்கை ஆழியான் எழுதிய "நந்திக் கடற்கரை" எஸ்.ரஞ்சகுமார் எழுதிய "நவகண்டம்" பெனிபே எழுதிய "கடவுள் உள்ளே மனிதன் வெளியே" கேணிப்பித்தன் ச.அருளானந்தன் எழுதிய "வைராவெளி பேச்சியம்மன்" ஆகிய சிறுகதைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

பரிசில் வழங்கும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பரிசு பெற்றவர்கள் தங்களது சரியான முகவரியை அறியத் தருமாறு யாழ்.இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார்.

## நெல்லியடி மத்திய மகாவித்தியில் சுழலும் சொல்லாடு களம்

(தெல்லிப்பளை)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தினால் நடத்தப்படும் கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் துன்பத்திற்கு ஆளான பாத்திரம் கையேயியா? தசரதனா? இராமனா? பரதனா? இலக்குவனனா? மந்தரையா? என்னும் தலைப்பில் அமைந்த சுழலும் சொல்லாடு களம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தொடக்கவுரையை நெல்லயடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா, அறிமுகவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நடுவராகவும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, புதிய உயர்கல்லூரி விரிவுரையாளர் நா.குழந்தைவேலு ஆகியோர் நோக்குநர்களாகவும் கடமையாற்றவுள்ளனர்.

மேலும் இச்சொல்லாடு களத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்,தமிழ் முதுதத்துவமாணி ஆய்வு மாணவன் த.அஜந்தகுமார், யாழ்.பல்கலைக்கழக கணக்கியற்துறைத் தலைவர் தி.வேல்நம்பி முன்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஆசிரியர் வேல் நந்தகுமார்,கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி ஆசிரியர் த.ஜீவராஜா மற்றும் இரா.செல்வவடிவேல் ஆகியோர் வாதிடவுள்ளனர். (44)

## ஓய்வும் நியமனமும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை காணி மாவட்டப் பதிவகத்தில் காணி மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றிய திருமதி தி.சரஸ்வதி கடந்த மாதம் 30ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இவரது வெற்றிடத்திற்கு முல்லைத்தீவில் பதில் காணி மாவட்டப்பதிவாளராக கடமையாற்றிய நீ.பிரபாகரன் கடந்த 27ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் என்பவற்றில் மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (35)

## சம்பந்தன் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தன் விருது அறக்கட்டளை சபையினால் வழங்கப்படும் சம்பந்தன் விருதிற்கு (2010) படைப்பாளிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

படைப்பாளிகள் தங்களது நூலில் ஒரு பிரதியை அது எத்தகைய துறை சார்ந்ததாயினும் தனித்துவமானதாக இருப்பின் செங்கை ஆழியான் 75/10A, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்க வேண்டும்.

வருடாவருடம் வழங்கப்பட்டு வரும் இவ்விருது கடந்த காலங்களில் பேராசிரியர் அ.சண்முகதாஸ்,கலாநிதி பண்டிதர் சச்சிதானந்தம், எழுத்தாளர் தெளிவத்தை யோசப், பேராசிரியர் பத்மநாதன், படைப்பாளி சு.வே, பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரியர் சத்தியசீலன், பேராசிரியர் இரா.கனகரத்தினம், பேராசிரியர் விசாகரூபன் ஆகியோருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜசேர்கனன் இவ் விருதுக்காக 10ஆயிரம் ரூபாவை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## கழிவுப்பொருட்களால் துர்நாற்றம்; பிரயாணிகள் அசௌகரியம்

(நல்லூர்)

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இருந்து பிரிந்து செல்லும் அம்மன் கோயில் வீதிப் பகுதியில் பாலத்திற்கு அருகாமையில் கழிவுப்பொருட்களை கொட்டுவதால் அவ்வீதியால் போக்குவரத்து செய்ய முடியாது துர்நாற்றம் வீசுவதாக பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதிப்பகுதியில் விலங்குகளின் எச்சங்கள், அழுகிய மரக்கறிகள், பழங்கள் உள்ளிட்ட கழிவுப்பொருட்களை உரப்பைகளில் போட்டு கட்டி அவற்றை சிலர் அங்கு கொண்டு வந்து போட்டுவிட்டு செல்வதாகவும், இதனால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடாகவும் காணப்படுவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகிறன்றனர்.

நல்லூர் பிரதேச சபையினர் இவ்வாறு கழிவுப் பொருட்களை கொட்டுபவர்கள் மீது பல்வேறுபட்ட நடவடிக்கை எடுத்தபோதிலும், ஒரு சிலர் இரவு வேளைகளில் கழிவுப் பொருட்களை தொடர்ந்தும் போடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சுகாதாரத்தைப் பேணுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (74)



ஜி.சிறிஸ்கந்தராசா சீறைங் இன்ரநஷனல் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட அமெரிக்க உற்பத்தியான நிறுத்தல் அளவை உபகரணங்களின் பொருட்காட்சியும் விற்பனையும் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட நிறுத்தல் அளவை உபகரணங்களை காணலாம்

(படம் - பார்த்தீபன்)

# கஷ்டமான காலங்களில் மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து செயற்பட்டவர் ஆயர் அம்பலவாணர்

## ஆயர் அதிவண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(மன்னார்)

மக்கள் எதிர்நோக்கி வந்த கஷ்டமான காலங்களில் எல்லாம் மக்களோடு மக்களாக ஒன்றிருந்து அவர்களை எங்கெல்லாம் இடம்பெயர்ந்து சென்றார்களோ அவர்களுடைய அவலங்களையும் சுமந்து சென்ற ஒரு ஆயர் என்றால் தமிழ் திருச்சபை வரலாற்றில் பேராயர் அம்பலவாணர்தான் என்று மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர் அதிவண கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்தார்.

மட்டக்களப்பு புனித யோவான் ஆலயத்தில் மறைந்த முன்னாள் யாழ்.திருமண்டல பேராயர் டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அடிகளாரின் 40ஆம் ஆண்டு பேரருட் பொழிவு நன்றி செலுத்தும் வழிபாட்டில் கலந்து கொண்டு நயப்புரை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிறிஸ்தவ சபைகள் எல்லாம் ஒன்றாக இணைந்து இம் மண்ணிலே பணியாற்ற வேண்டுமென்று துடியாய்த் துடித்தவர். ஒரு சிறந்த இறையியலாளர். சொன்னதைச் செய்பவர், ஒரு செயல் வீரன், அவரது பணி சற்று வித்தியாசமானது. துயர் துடைக்கும் பணிமூலம் இறையரசின் பணியை சிறப்பாகச் செய்தார் எனத் தெரிவித்தார்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்குரு எஸ்.ஞானராஜ் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைக்குரு, கிழக்குப் பிராந்திய குரு முதல்வர் அருட்திரு



நவேந்திர அனுகூலன் ஆகியோர் உரையாற்றினர்.

மறையுரையினை கொழும்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைக்குரு தே.தேவநேசன் அடிகளார் வழங்கினார். திருச்சபைத் தலைவர் அருட்திரு அ.ஜெயக்குமாரன் அடிகளார் உட்பட வன்னி, யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், வவுனியா, மலையகம் உட்படப் பல இடங்களிலிருந்தும் அருட்பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் கம்பர்மலை வித்தியாலயத்திற்குச் செல்லும் குறுக்கு வழியாகிய மந்திராவளவு வீதியைப் புனரமைத்துத் தருமாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கம்பர்மலை வித்தியாலயத்திற்கும், கெருடாவில் கொம்மாந்துறை ஆகிய பகுதிகளுக்கும் செல்வதறகான குறுகிய வழித்தூரமாக மந்திராவளவு வீதி காணப்படுகின்றது. இவ்வீதி திருத்தியமைக்கப்படுவதன் மூலம் இப் பகுதி மாணவர்களும் மக்களும் பெரிதும் பயன்பெறுவர்.

அமைச்சர் அவர்களின் முன் முயற்சிகளின்படி கம்பர்மலை வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மந்திராவளவு வீதியையும் புனரமைத்துத் தருமாறு வேண்டுவதாகவும் அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வீதியோர குளிர்பான வியாபாரம்; நகரில் சீர்கெடும் சுகாதாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முனீஸ்வரன் வீதியில் வண்டிகளில் வைத்து சர்பத் விற்கப்படுவதால் சுகாதாரத் திற்குப் பங்கம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

வீதியோரத்தில் வைத்து விற்கப்படும் இந்த சர்பத்தை அநேக மானவர்கள் வாங்கிப் பருகி விட்டுச் செல்கின்றனர்.

குடாநாட்டில் தற்போது இறுக்கமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார நடவடிக்கைக்கு இந்த குளிர்பான விற்பனையால் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (வி)



மல்லாகம் மகா வித்தியாலயத்தில் தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிற் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் வங்கியின் வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர் வி.அருளானந்தம் அவர்களிடமிருந்து மாணவியொருவர் பரிசில் பெற்றுக்கொள்வதைக் காணலாம். (44)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(02.07.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆனி 17 ஆம் நாள்.

இராகுகாலம்08.56–10.26, சுபநேரம் 2.56 –4.26,

நட்சத்திரம் புனர்பூசம் மு.இ. 11.43 வரை

திதி: பிரதமை பி.ப. 2.08 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**


மேடம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, காரியத்தடை, தேக நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு.


ரிஷபம்:– பணமுடை, தேகநலம் பாதிப்பு, உறவினர் ப... க, குடும்பத்தில் குழப்பம், மனச் சோர்வு.


மிதுனம் :– பண வரவு, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, தொழில் பாதிப்பு.


கடகம்:– பணமுடை, தேக நலக் குறைவு, பொருள் இழப்பு, தூரத்திலிருந்து துக்கசெய்தி, மனச் சஞ்சலம்.


சிம்மம்:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, ஆலய வழிபாடு, தனச் சேர்க்கை, தொழில் விருத்தி.


கன்னி :– பண வரவு, குடும்பத்தில் நிம்மதி, தொழில் லாபம், ஆலய வழிபாடு, அமைதி.


துலாம் :– பணக் கஷ்டம், உடல்நலக் குறைவு, மருத்துவச் செலவு, குடும்பத்தில் அமைதி, மௌனம்.


விருச்சிகம்:– குடும்பத்தில் குழப்பம், தேக ஆரோக்கியம், பண வரவு, தொழில் விருத்தி, அயலவர் கரைச்சல்.


தனுசு:– பண வரவு, தொழில் விருத்தி, தனலாபம், குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி.


மகரம்:– பணமுடை, குடும்பத்தில் கவலை, மனக் குழப்பம், வீண் சண்டை, தெரு விபத்து.


கும்பம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், தொழிலில் லாபம், ஆலய வழிபாடு, நண்பர் தொல்லை.


மீனம்:– பணமுடை, தேக நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, சிநேகிதர் தொல்லை, தெரு விபத்து.

# அலங்கார உற்சவம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் - கோட்டை முனீஸ்வரன் கோவில் மணவாளக்கோல அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி மங்களவாரம் வரை 25 நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெறுவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 4.30 மணிக்கு சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலும் அவரது மாணவர்களும் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பிற்பகல் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி திரு வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (10)

# மஹோற்சவம்

(யாழ். நிருபர்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில்,எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்சவமும், மறுநாள் 14 ஆம் திகதி வியாழக்கிமை பகல் 12.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

திருவிழாக்காலங்களில் தினமும் மாலை 7.00 மணிமுதல் 8.00 மணி வரை சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் விநாயகர் புராணம் பற்றி தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். (10)

# "நவபாரதம்" நூல் வெளியீடு

(தெல்லிப்பளை)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 'நவபாரதம்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள பண்டிதமணி இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் பண்டிதை பொன். பாக்கியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வரவேற்புரையைக் கொட்டடி நமசிவாயம் மகாவித்தியாலய அதிபர் பஞ்சாட்சரம் கணேசன் நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபைப் போசகர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.

முதற்பிரதியைப் பிரசித்த நொதாரிசு ச.தங்கம்மா மயிலோனிடமிருந்து தனங்கிளப்பு முன்னாள் கிராம சேவையாளர் பொன்னையா நமசிவாயம் பெற்றுக் கொள்வார். (44)

## மீள்குடியேறிய 75 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அண்மையில் மீள்குடியேறிய சுமார் 75 குடும்பங்களுக்கு எவ்.ஏ.ஓ நிறுவனம் வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வொனறிலேயே இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

ஜே-89, ஜே-90 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேறிய மக்களுக்கே கோழிக் குஞ்சு, கோழித்தீவனம், கோழிக் கூடு அமைப்பதற்கான உதவு பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் கு.சுரேந்திரநாதன் எவ்.ஏ.ஓ.நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினர்.


# மக்கள் வங்கிக்கு மனதார வாழ்த்து

பொன் விழா 2011



ஒப்பற்ற வங்கிச்சேவையில் 50 ஆண்டுகள் மகத்தான சேவைதனைப் பூர்த்தி செய்து பொன் விழாக்காணும் மக்கள் வங்கிக்கு மகிழ்ச் சிகரமான இந்தத் தருணத்திலே எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெரும் மகிழ்வெய்துகின்றேன்.

நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில்கூட மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து, மக்கள் வங்கி ஆற்றிய அரும்பணிகள் போற்றப் படக்கூடியனவாகும்.

இன்றுவரை சிறப்பான சேமிப்புத்திட்டங்களையும் இலகு கடன்களையும் வழங்கி, எமது பிரதேசத்தின் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டுக்காக மக்கள் வங்கி சிறப்பான சேவைதனை வங்கிவருகின்றது.

மக்கள் வங்கி, இதே பொலிவுடனும் பெருமையுடனும் தொடர்ந்தும் பல நூற்றாண்டுகளைக் கடந்து மக்களுக்கான தனது சேவையை வழங்கவேண்டுமென வாழ்த்தி ஆசிகூறுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
**தர்மசாஸ்தா குருகுலம்,**
**இணுவில்.**



**On the Occasion of the Golden Jubilee of People's Bank the Message of the Bishop of Jaffna**

On the Occasion of the Golden Jubilee celebration of the People's Bank we congratulate you for your services to the people of Sri Lanka towards their economic development and the prosperity of the Country.

Through your several services you have contributed to the uplifted to the poor people and their improvement of their life. Hence on the occasion of your Golden Jubilee I wish the General Manager and all the Staff continued happiness and welfare.

Thank you and May God bless you,



**Rt.Rev.Dr.Thomas Savundarnayagam**
**Bishop of Jaffna**

(C/541)

# சிங்கப்பூர் வலைப்பந்தாட்டம்; இலங்கை அணி சென்றது



(கொழும்பு)

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்காக இலங்கை அணி வீராங்கனைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிங்கப்பூருக்குப் புறப்பட்டனர்.

இலங்கையிலிருந்து புறப்படும் முன்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயுடன் இலங்கை வலைப்பந்தாட்ட அணி வீராங்கனை முகாமையாளர் பயிற்றுவிப்பாளாகளுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். 6 அடி 9 அங்குல உயரமான தர்ஷினி சிவலிங்கமும் இவ்வணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜூலை 3 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள இப்போட்டிகளின் முதல் சுற்றில் அவுஸ்ரேலியா, சமோவா, வடஅயர்லாந்து ஆகிய நாடுகளுடன் இலங்கை மோதவுள்ளது.

# கூடைப்பந்தாட்டத்தை வளர்த்தெடுக்க குடாநாட்டில் ஊர்தி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தை வளர்த்தெடுக்கும் முகமாக நேற்று முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை கூடைப்பந்தாட்டப் பந்தைத் தாங்கிய ஊர்தி ஊர்வலம் ஒன்று யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செல்லவுள்ளது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் கூடைப்பந்தாட்டம் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் யாழ்.மாவட்டத்தில் தேசிய மட்டத்திற்கான விளையாட்டு வீர, வீராங்கனைகள் இருப்பதை உணர்த்துவதுடன் அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக இந்த ஊர்தி ஊர்வலம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# வவுனியா மாவட்ட மகளிர் அணியின் சாதனைப் பட்டியல் தொடர்கின்றது

(வவுனியா)

வடமாகாண கபடிப் போட்டியில் வவுனியா மாவட்ட மகளிர் அணி தொடர்ச்சியாக 12 ஆவது வருடமாக முதலாமிடத்தை பெற்றுள்ளதாக வடமாகாண கபடி பயிற்றுவிப்பாளர் லலித் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு தொடக்கம் முதலாம் இடத்தினை தங்கவைத்துள்ள மகளிர் அணியினர் வவுனியா மாவட்டத்தின் விளையாட்டுத்துறைக்கு பெரும் பங்காற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, 2001 ஆம் ஆண்டு முதல் வவுனியா மாவட்ட ஆண்கள் கபடி அணியினர் முதலாம் இடத்தினை தங்க வைத்துள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

எனினும் சிறந்த பயிற்சித்தளம் இல்லாத நிலையிலும் தமது கடினமான பயிற்சியின் மூலமாக சிறந்த நிலையில் உள்ள குறித்த போட்டியாளர்களின் வளர்ச்சிக்கு வவுனியா மாவட்டத்தில் கபடி பயிற்சித்தளம் அமைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பட்டார்.

இதேவேளை கடந்த மாதம் 11ஆம் திகதி மன்னார் நகர சபை மைதானத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான கபடிப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா மாவட்டமும், இரண்டாமிடத்தை யாழ்.மாவட்டமும் பெற்றுக் கொண்டன.

இந்த இரு அணிகளும் வெற்றி பெற்றதன் மூலம் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன.

(12)

# தேசிய ரீதியான மென்பந்து கிரிக்கெட்; தென் மாகாண அணிக்குக் கிண்ணம்

(கொழும்பு)

தேசிய ரீதியில் மாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தென் மாகாண அணி கிண்ணத்தை சுவீரித்தது.

விளையாட்டு செய்திகள்

தென் மாகாண அணியை எதிர்த்தாடிய கல்முனை சனிமௌன்ட் விளையாட்டு கழக வீரர்களை பிரதிநிதித்துவப் படுத்திய கிழக்கு மாகாண அணி இரண்டாம் இடத்தை பெற்று கல்முனை நகருக்கு வந்தபோது மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

மாகாணங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி கொழும்பு டொரிங்டன் மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட தென் மாகாண அணி 15 ஓவர்களில் 8 விக்கட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிழக்கு மாகாண அணி (சனிமௌன்ட்) 15 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்று போட்டியில் இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது.

# வடமாகாண கபடிப் போட்டி; யாழ்.மாவட்டம் முதலிடம்

(வவுனியா)

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

வவுனியா நகர சபை மண்படத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் ஆணகள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும், இரண்டாமிடத்தை வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை வவுனியா கணேஸ்வரா மகா வித்தியலாயமும் பெற்றுக்கொண்டன.

வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்களையும், சான்றிதழ்களையும் நவோதயா பாடசாலை இணைப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான கே.செல்வன் வழங்கி வைத்தார்.

(12)



**கிளிநொச்சி-கனகபுரம் சிறிகாந்தா முன்பள்ளியில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் மழலைகளின் ஓட்டத்தைக் காணலாம்.**

# அதிவேக போர் விமானத்தில் பறக்க டோனி, சச்சினுக்கு அனுமதியளிப்பு



(மும்பை)

உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி மற்றும் நட்சத்திர வீரர் டெண்டுல்கர் ஆகியோரை இந்திய விமானப்படைக்குச் சொந்தமான சுகோய் அதிவேக போர்விமானத்தில் பறக்க வைத்து கௌரவப்படுத்த இந்திய விமானப்படை முடிவு செய்து, இதற்காக மத்திய இராணுவ அமைச்சகத்திடம் சிறப்பு அனுமதி கேட்டு இருந்தது.

இதற்கு மத்திய இராணுவ அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. இது குறித்து இந்திய விமானப்படை அதிகாரி ஒருவர் கூறுகையில், இந்திய விமானப் படைக்கு சொந்தமான அதிவேக விமானமான சுகோய்யில் டெண்டுல்கர், டோனி ஆகியோரை பறக்க வைக்கும் எங்கள் திட்டத்திற்கு மத்திய இராணுவ அமைச்சகம் அனுமதி கொடுத்துள்ளது. புனே விமானப்படைத் தளத்தில் இருந்து இந்த விமானம் இருவரையும் அழைத்து செல்லும். அவர்கள் செல்லும் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இருவரிடமும் கலந்து பேசி அவர்களுக்கு சௌகரியமான நாளில் அழைத்து செல்லப்படுவார்கள்.

நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் அவர்களை கௌரவிக்கும் விதத்தில் இந்தப் பயணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டெண்டுல்கர் ஏற்கனவே விமானப்படையில் கௌரவ குரூப் கப்டனாக இருக்கிறார் என்று தெரிவித்தார்.



# விம்பிள்டன் பெண்கள் ஒற்றையர் ஷரபோவா, விட்டோவா இறுதிச் சுற்றில்


ஷரபோவா


விட்டோவா

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் பெண்கள் ஒற்றையரில் ஷரபோவா-விட்டோவா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் கௌரவம் மிக்க விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடந்து வருகிறது. இறுதிகட்டத்தை நெருங்கி விட்ட இந்தப் போட்டியில் நேற்று முன்தினம் பெண்கள் ஒற்றையரில் நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் 4ஆம் நிலை வீராங்கனை பெலாரசின் விக்டோரியா அஸரென்காவும், 8ஆம் நிலை வீராங்கனை செக்குடியரசின் பெட்ரா விட்டோவாவும் பலப்பரீட்சை நடத்தினார்கள்.

1 மணி 44 நிமிடங்கள் நடந்த பரபரப்பான இந்த ஆட்டத்தில் 21 வயதான கிவிடோவா 6-1, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் கிவிடோவா இறுதிசுற்றை எட்டியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

மற்றொரு அரையிறுதியில் 5ஆம் நிலை வீராங்கனையான ரஷ்ய புயல் மரிய ஷரபோவாவும், ஜேர்மனியின் இளம் வீராங்கனை சபினே லிசிக்கியும் மோதினார்கள். இதில் சர்வீஸ் போடுவதில் ஷரபோவா கொஞ்சம் தடுமாறினார். 13 முறை டபுள் பால்ட் செய்தாலும், தனது அதிரடியான ஷாட்கள் மூலம், லிசிக்கியின் சவாலை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

87 நிமிடங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் ஷரபோவா 6-4, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். 2004ஆம் ஆண்டு சம்பியனான ஷரபோவா இன்று நடக்கும் இறுதிப்போட்டியில் விட்டோவாவுடன் பலப்பரீட்சை நடத்துகிறார். இதேவேளை, கலப்பு இரட்டையர் 3ஆவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா- ரோகன் போபண்ணா ஜோடி 6-3, 6-0 என்ற நேர் செட்டில் செக்குடியரசின் மார்ட்டின் டேம்-ரெனட்டா வோரகோவா இணையை வீழ்த்தி காலிறுதியை எட்டியது. சானியா ஏற்கனவே பெண்கள் இரட்டையரில் ரஷ்யாவின் வெஸ்னினாவுடன் இணைந்து அரையிறுதிக்கு முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# டோனிக்குத் தவறான அவுட்; ஒப்புக்கொண்டது ஐ.சி.சி

மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் இந்திய தலைவர் டோனிக்கு தவறான ரீப்ளே மூலம் அவுட் கொடுக்கப்பட்டதை சர்வதேச கிரிக்கெட்சபை ஒப்புக்கொண்டுள்ளது. ஒளிபரப்புதாரர்கள் செய்த தவறால் துரதிர்ஷ்டவசமாக இது நிகழ்ந்துள்ளது.

இந்தத் தொடருக்கான நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியை தயாரிக்கும் நிறுவனமான ஐ.எம்.ஜி மீடியா தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டுள்ளது. போட்டி தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதால், டோனிக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் முடிவில் மாற்றம் செய்ய வாய்ப்பில்லை என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. நடந்த தவறுக்கு பொறுப்பேற்று கொண்ட ஐ.எம்.ஜி. மீடியா, இந்த விவகாரத்தை சீரியசாக எடுத்துக் கொண்டுள்ளதாகவும், கவனக்குறைவால் இந்தத் தவறு நடந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.



# சர்வதேச கால்பந்தாட்ட அணிகளில் முன்னிலை பெற்றது இங்கிலாந்து

(லண்டன்)

சர்வதேச கால்பந்து அமைப்பின் தற்போதைய பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில் பிரேசில், ஆர்ஜென்ரீனா அணிகளை முந்தி இங்கிலாந்து முன்னணியில் உள்ளது. இங்கிலாந்து அணி கடந்த கோடைகால உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் கடைசி 16 அணிகள் பட்டியலில் இடம் பிடித்தது. மேலும் அடுத்த கோடைகால ஐரோப்பிய சம்பின்ஷிப் போட்டிக்கு நடந்த சமீப 3 தகுதி ஆட்டங்களில் இங்கிலாந்து வெற்றி பெறத் தவறியுள்ளது.

இதற்கு முன்னர் தரப்பட்டியலில் அதிகபட்ச நிலையான 4ஆவது இடத்தை 1997ஆம் ஆண்டு இங்கிலாந்து பெற்றிருந்தது. உலகத் தரப்பட்டியலில் ஸ்பெயின் அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அந்த அணி 1871 புள்ளிகள் எடுத்துள்ளது.

நெதர்லாந்து 2 ஆவது இடத்தில் உள்ளது. ஜேர்மனி (1417 புள்ளிகள்) 3 ஆவது இடத்திலும் பிரேசில், இத்தாலி (1059) 5 ஆவது இடத்திலும் உள்ளன. இதையடுத்து போர்த்துக்கல் (1046), குரோஷியா (1033) உள்ளன. முதல் 10 அணிகள் பட்டியலில் மெக்சிகோ இடம்பிடித்துள்ளது. ஆர்ஜென்ரீனா (979) அணியும் முதல் 10 அணி வரிசையில் உள்ளது.

# இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் 37ஆவது தேசிய பெருவிளையாட்டுப் போட்டித் தொடர் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

கொழும்பில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் வரும் நான்காம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஆண்கள், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் இதன்போது நடைபெறவுள்ளதாகவும், இதில் வடமாகாண அணி உட்பட அனைத்து மாவட்டங்களின் அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு வேண்டாம்

## அறிவுறுத்துகின்றது ஐ.சி.சி.

(ஹொங்கொங்)

அனைத்து நாட்டு கிரிக்கெட் சபையின் செயற்பாடுகள், நிர்வாகிகள் தேர்தல் ஆகியவை சுதந்திரமாக இருக்க வேண்டும். கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் அரசியல் மற்றும் அரசு தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் காலக்கெடுவும் விதித்துள்ளது.

இதனை அமுல்படுத்த எல்லா கிரிக்கெட் வாரியங்களுக்கு 2 ஆண்டுகள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. அதாவது 2013ஆம் ஆண்டு ஜுன் மாதத்துக்குள் இந்த புதிய விதிமுறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஐ.சி.சி.யின் இந்த நடவடிக்கை முக்கியமானது என்று ஐ.சி.சி. தலைமைச் செயல் அதிகாரி ஹாரூன் லார்கட் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் கிரிக்கெட் சபைகளில் செயல்பாட்டுகள் அந்தந்த நாட்டு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் இருந்து அந்த நாட்டு சபைகள் வெளிவர வேண்டும் என்ற நோக்கில் இந்த விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. ஐ.சி.சி.யின் இந்த முடிவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்து இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஹொங்கொங்கில் நடந்த கூட்டத்தில் அனைத்து நாட்டுக் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் அனைத்து நாட்டு கிரிக்கெட் சபைகளுக்கு ஐ.சி.சி. புதிய விதிமுறையை அமுல்படுத்த அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய நிர்வாகக் குழு தெரிவு

ஊழல் மற்றும் நிர்வாகத் திறமையின்மை குற்றச்சாட் டுகள் கூறப்பட்ட இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகம் நேற்று திடீரெனக் கலைக்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் நிர்வாக சபைக்கு புதிய அங்கத்தவர்கள் உடனடியாகவே தெரிவு செய்யப்பட்டனர். இதன்படி தலைவராக உபாலி தர்மதாஸ, செயலாளராக பிரகாஷ் ஷாவ்டர், பொருளாளராக நிமால் பெரேரா ஆகியோரும் சிதத் வெத்தமுனி உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நான்கு இந்திய வீரர்கள் சிக்கினர்

(புதுடில்லி)

இந்திய முன்னணி தடகள வீராங்கனைகள் மந்தீப் கவுர், ஜுவானா முர்மு ஆகியோர் போட்டிகளின் போது ஊக்கமருந்து பயன்படுத்தியது நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் இந்திய தடகளத்தை சேர்ந்த மேலும் 4 பேர் ஊக்கமருந்தில் சிக்கி உள்ளனர். கடந்த ஆண்டு நடந்த கொமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டில் 4x400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கபதக்கம் வென்ற இந்திய குழுவில் இடம் பெற்றிருந்த கேரளாவை சேர்ந்த சினி ஜோஸ், 400 மீற்றர் ஓட்டப்பந்தய வீராங்கனை டயானா மேரி தாமஸ், நீளம் தாண்டும் வீரர் ஹரி கிருஷ்ணன், குண்டு எறிதல் வீராங்கனை சோனியா ஆகியோருக்கு சமீபத்தில் தேசிய ஊக்கமருந்து தடுப்பு கழகம் ஊக்கமருந்து சோதனை நடத்தியது. இந்த பரிசோதனையின் முடிவு நேற்று வெளியானது. இதில் அவர்கள் தடை செய்யப்பட்ட மெத்தன்டையனோன் என்ற ஊக்கமருந்தை உபயோகப்படுத்தியது தெரிய வந்துள்ளது. இதையடுத்து அவர்கள் உடனடியாக தடகளத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# வெளிநாட்டு மாணவருக்கான அனுமதி அரசு தனது வங்கிக்கணக்கை நிரப்பவே

## என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

வெளிநாட்டு மாணவர்களை இலங்கைக்கு வரவழைப்பதன் மூலம், கிடைக்கும் வெளிநாட்டுப் பணத்தை தங்களுடைய வங்கிக் கணக்குகளை நிரப்பிக் கொள்வதற்கே அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக ஐ.தே.க.தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் இன்று காணப்படும் நிலைக்கு அமைய உயர்கல்விக்கு இடி விழுந்துள்ளது.

இதன் காரணமாக இன்று பல்கலைக் கழகங்களில் வகுப்புக்கள் நடத்தப்படுவதில்லை. வகுப்பறைகள் வெறுமையாகக் காணப்படுகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

வெளிநாட்டு மாணவர்களை இலங்கைக்கு அதிகம் வரவழைத்து வெளிநாட்டுப் பணத்தின் ஊடாக தங்களுடைய வங்கிக் கணக்குகளை நிரப்பிக் கொள்ள அரசாங்கத்திற்கு தேவை ஏற்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு வளமான எதிர்காலம் என இந்த அரசாங்கம் முணுமுணுக்கின்ற நிலையில், உயர்கல்விக்கு இவர்கள் இழைக்கும் தீங்கினைப் பார்க்கும்போது மாணவர்களுக்கு இலங்கையில் வளமான எதிர்காலம் இருக்குமா என கேள்வி எழுப்ப நேரிடுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவு விரைவான சேவையை வழங்க கணினிமயம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு விரைவான சேவையை வழங்கும் நோக்கில் வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவு கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் நடவடிக்கைகளை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா ஆரம்பித்து வைத்தார்.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகள் வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவு ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றன.

வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பிறப்பு, விவாக மற்றும் இறப்பு அத்தாட்சி பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்டதாக அத்தாட்சிப்படுத்தும் பணியையும் இந்த அலுவலகம் முன்னெடுக்கின்றது.

இந்த நிறுவனம் முழுமையாக கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் மக்களுக்கு விரைவாக சேவையை வழங்க எண்ணியுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

விரைவாக தகவலைப் பெற்று ஆவணங்கள் உறுதிப் படுத்தி முன்னதாக விட ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன்னதாக தமது தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு இதன் மூலம் மக்களுக்கு கிடைத்துள்ளதாக பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

மக்கள் தமது ஆவணங்களை காலை 11 மணிக்கு முன்னர் தூதுவராலயங்களில் சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிட்ட பிரதி அமைச்சர், அன்றைய தினமே அவற்றை ஆவணப்படுத்திக் கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டார்

# நுகர்வோர் அதிகார சபைக்கு 35 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

இவ்வருடத்தில் மேற்கொண்டுள்ள சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மூலம் 35 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார சபை தெரிவித்துள்ளது.

இதனுள் 6 மில்லியன் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு மூலம் பெறப்பட்டவை எனச் சபை தெரிவித்துள்ளது.

விற்பனை விலை பிரசுரிக்கத் தவறியமை, எல்லை விலையிலும் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை மற்றும் காலவதியான பொருட்களை விற்பனை செய்தமை போன்ற குற்றசாட்டுகளின் பேரிலே அதிகம் தண்டப்பணம் பெறப்பட்டுள்ளதாக சபை அறிவித்துள்ளது.

கொழும்பு, மாத்தளை, மொனராகலை, அநுராதபுரம், அம்பாறை, புத்தளம், கண்டி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே இச்சுற்றிவளைப்பு தேடுதல்கள் அதிகம் மேற்கொள்ளப்பட்டதாக சபை தெரிவித்துள்ளது.

# வடக்கு,கிழக்கிலுள்ள இராணுவ நிர்வாகத்தை உடனடியாக அரசாங்கம் நீக்கவேண்டும்

## அனுர குமார திஸநாயக்க எம்.பி.கோரிக்கை



(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு பகுதியில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இராணுவ நிர்வாகத்தை உடனடியாக நீக்கி விட்டு, அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.**

யுத்தம் நிறைவடைந்து, இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில், அந்தப் பிரதேசங்களில் தொடர்ந்தும் இராணுவ நிர்வாகம் இருப்பது மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் தடையாக உள்ளது, இதனால் அந்தப் பிரதேசங்களில மீண்டும் குழப்பமான நிலைமைகள் உருவாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

வடபகுதியின் சகல நடவடிக்கைகளையும் இராணுவத்தினர் மேற்கொள்வது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடையாக உள்ளது. அண்மையில், யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை பகுதியில் இராணுவத்தினர் சகல குடும்பங்களையும் புகைப்படம் எடுத்துள்ளனர்.

அதேவேளை வடக்கு, கிழக்கில், தாக்குதல் சம்பவங்கள், அச்சுறுத்தல் விடுத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன, இந்த நிலைமையை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால், யுத்தத்தினால் பெற்ற வெற்றிக்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போகும்.

புலிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து, வாழ்ந்த மக்களை தொடர்ந்தும் அதே நிலையில், வாழச் செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல, இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் புரிந்துணர்வுடன் செயற்படத் தவறுமானால், எதிர்காலத்தில் பெரும் அனர்த்தங்கள் உருவாகும் நிலைமை ஏற்படுவதை தடுக்க முடியாது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு தெளிவுபடுத்துவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமைகளை மீறும் வகையிலான அனைத்து தலையீடுகளையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வடக்கு,கிழக்கிற்கான சரியான தீர்வை நாடாளுமன்றம் மூலம் உருவாக்கமுடியும்

## அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் மூலம் மாத்திரமே வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வை உருவாக்க முடியும் என அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலத்தை விட தற்போது, நாட்டில் முற்றாக மாறுப்பட்ட நிலைமை காணப்படுவதாகவும் இதனால், சரியான தேசியப் பிரச்சினைகள் குறித்து, பல கட்சிகள் கொண்டு நிலைப்பாடுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக கலந்துரையாடி அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்க முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சர் யாப்பா இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட தெரிவுக் குழுக்களை யுத்தத்தின் பின்னர், ஸ்தாபிக்கப்படும் இந்த தெரிவுக்குழு மாறுபட்டது எனவும் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனையும் கவனத்தில் எடுக்கப்படும் எனவும், அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் நாடாளுமன்றத்தில் உள்ளன. இதனால்,சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி உண்மையான தீர்வை நாடாளுமன்றத்தில் தயாரித்து, அதனை மக்களிடம் சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையர்கள் அமெரிக்காவில் கைது

(கொழும்பு)

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையொன்றின் போது இலங்கையர்கள் குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தங்கியிருப்பதற்கான வீசா அனுமதியின்றி சட்டவிரோதமாகத் தங்கியிருந்த குற்றச்சாட்டிலேயே பிரஸ்தாப இலங்கையர்கள் அமெரிக்க குடிவரவுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் முக்கிய மாநிலங்களில் ஒன்றான டெக்ஸாஸ் மாநிலத்தின் ஒதுக்குப்புறமான வீடொன்றில் மறைவாகத் தங்கியிருந்த நிலையிலேயே அவர்கள் குடிவரவுப் பிரிவினரிடம் சிக்கிக் கொண்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

குடிவரவுப் பிரிவினருக்குக் கிடைத்திருந்த இரகசியத் தகவலொன்றையடுத்தே பிரஸ்தாப தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கு மொத்தமாக பதினாறு பேர் சட்டவிரோதமாகத் தங்கியிருந்துள்ளதுடன், அவர்களில் ஏனைய நாட்டவர்கள் சிலரும் உள்ளடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பஸ்களில் பொருட்களை தவறவிட்டவர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்க ஏற்பாடு

(கொழும்பு)

பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் தமது பொருட்களை பஸ்களில் இழக்க நேரிட்டால் அது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 0112-333222 எனும் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு உடனடியாக தொடர்பு கொண்டு அறிவிக்கலாம் என அவ்வாணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய ஆணைக் குழுவின் இயக்குநர், சந்திரசிறி வீரசேகர தெரிவிக்கையில், நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 5 முறைப்பாடுகளை பஸ்களில் பிரயாணம் செய்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம். அத்துடன் மேலும் பலர் நேரடியாக ஆணைக்குழுவிற்கு வருகைதந்து தமது பொருட்கள் காணாமல் போய்விட்டதாக முறையிடுகின்றனர் என்றார்.

“நாம் இவ்வாறு பொருட்களைத் தொலைத்துவிட்டு வந்த பலருக்கு அவர்களது பொருட்களைக் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளோம். அதேவேளை அவசர தொலைபேசி சேவை இதுவரை வெற்றிகரமாக அமைந்துள்ளது” எனவும் அவர் கூறினார்.

ஒரு சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் பயணம் செய்யும் போது தனது 7 வயது மகனை தவறவிட்ட தந்தையொருவருக்கு அவரது மகனை மீண்டும் கண்டுபிடிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உதவி செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

“பஸ் உரிமையாளர்களிடமிருந்து நாம் தேவையான தகவல்களை பெற்றுக் கொண்டு, பயணிகள் தொலைத்த பொருட்களைக் கண்டுபிடித்து தருமாறு பஸ் நடத்துநர்களிடம் கோருகிறோம். ஆனால் தொலைந்த பொருட்கள் கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தரவாதமளிக்காது” எனவும் அவர் கூறினார்.

# வகுப்பறைக் கட்டட நிர்மாணிப்பிற்கு ஐந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

அண்மையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட பகுதியான இயக்கச்சிப் பகுதியிலுள்ள இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வகுப்பறைக் கட்டட நிர்மாணிப்புப் பணிகளுக்காக ஐந்து மில்லியன் ரூபாய் பெறுமதியான நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கான சைக்கிள்களும் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இவற்றை வழங்கி வைத்து உரையாற்றிய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவிக்கையில்,

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் இரண்டாவது பெரிய பாடசாலையாகிய இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக ஐந்து மில்லியன் ரூபாய் பெறுமதியில் புதிய வகுப்பறைக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக பொருளாதார அமைச்சின் வடக்கின் துரித மீட்புத்திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் முற்றாகவே அழிவடைந்த இயக்கச்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தாம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்யவுள்ளோம் என்றார்.

“சேவ் த சில்ட்றன்” என்ற தொண்டர் அமைப்பின் அனுசரணையுடன் மாணவர்களுக்கு 36 சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, இந்தப் பாடசாலை வளாகத்தில் தங்கியுள்ள படையினரையும் அவர்களின் சிற்றூண்டிச்சாலையையும் வேறிடத்திற்கு மாற்றுவதற்கு உதவுமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் கோரியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த அவர், இதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதே அரசாங்கத்தினதும் படையினரதும் நோக்கமாகும். ஆகவே இந்தக் கோரிக்கை விரைவில் சாத்தியமாகுமெனவும் அவர் உறுதியளித்தார்.

## வன்னிக்கு மாற்றப்பட்டிருந்த ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்து

(கொழும்பு)

வவுனியா தெற்கு வலயத்திலிருந்து வன்னிப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட சில ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இரத்துச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க வவுனியா கிளைத் தலைவர் என்.விஜயராசா தலைமையிலான குழுவினர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்.அலுவலகத்தில் சந்தித்து பேசிய போதே இதற்கான இணக்கம் காணப்பட்டது.

28 ஆசிரியர்களுடைய இடமாற்றங்களை இரத்துச் செய்ய ஆளுநர் உத்தரவுகளை வழங்கியுள்ளதாக தலைவர் விஜயராசா தெரிவித்தார்

இதேவேளை, தமது சுயவிருப்பத்தின் பேரில் வவுனியாவிலிருந்து 25 ஆசிரியர்கள் வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கேடு விளைவிக்கும் உணவு உற்பத்தி; தடை விதித்தது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கக் கூடிய வகையில் உணவு உற்பத்தி, பொதியிடல், களஞ்சியப்படுத்தல், பாவனை, விநியோகம், இறக்குமதி மற்றும் விற்பனை விளம்பரம் என்பனவற்றுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று அமுலுக்கு வந்துள்ளதாக சுகாதார அமைசசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக உணவுகளின் தன்மை, [illegible], குணவியல்பு என்பன பாதிக்கப்படும் வகையிலான செயற்பாடுகளின கீழ இது முழுமையாகத் தடைசெய்யப்படும். பொதுமக்களின் முறைப்பாடுகளை கவனத்திற்கொண்டு இந்த நடவடிக்கையை எடுத்ததாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புதிய தீர்மானத்திற்கு அமைய ஆகாரமல்லாத தயாரிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் பொதிகள், உறைகள், பைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய எந்தவொரு பொருளும் உணவு தயாரித்தல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல், விநியோகம் அல்லது விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக வேறொரு ஆகாரத்திற்காக ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட சாக்குப் பையோ, பொலிதீன் பையோ அரிசி பொதி செய்ய களஞ்சியப்படுத்த விநியோகிக்க மற்றும் விற்பனை செய்யத் தடை செய்யப்பட்டுள்ளதென சுகாதார அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியில் விளையாட்டுப் பொருளோ அல்லது வேறு எந்த பொருளோ உள்ளடக்கப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

# வவுனியா வளாக ஆராய்ச்சி அமர்வுக்கு ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பக் கோரல்

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் நான்காவது வருடாந்த ஆராய்ச்சி அமர்வை எதிர்வரும் நவம்பர் மாதம 16ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கான ஆய்வுக் கட்டுரைகளை இந்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக வவுனியா வளாகத்திற்கு கிடைக்ககூடியவாறு அனுப்பி வைக்கப்படவேண்டுமென ஏற்பாடடுக் குழுவின் இணைப்பாளர் வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசன் தெரிவித்தார்.

“பிராந்தியங்களின் அபிவிருத்திக்காக மேற்கிளம்பும் வாய்ப்புக்கள்” என்னும் தலைப்பில் இந்த ஆய்வரங்கு நடை பெறவுள்ளது.

பல்வேறு துறைசார் கருப்பொருட்களில் ஆய்வுக்கட்டுரைகளை ஏற்பாட்டாளர்கள் கோரி நிற்கின்றனர். கணக்கியலும் நிதியும், விவசாயம், மீன்வளர்ப்பு, கணினிக் கற்கைகள், பொருளியல், ஆங்கிலமொழி கற்கைகள், விஞ்ஞானமும் சுற்றுச்சூழலும், தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும், நூலகமும் தகவல் விஞ்ஞானமும், முகாமைத்துவம், கணிதமும் புள்ளிவிபரவியலும், இயற்கை விஞ்ஞானம் மற்றும் சமூக உளவியல் போன்ற உபதலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாக இணைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா வளாகம் தன்னுடைய வளர்ச்சிப்படியில் முதற்கட்டமாக 2008 ஆம் ஆண்டு முதலாவது வருடாந்த ஆராய்ச்சி அமர்வை நடத்தியது. அதிலிருந்து ஆராய்ச்சி அமர்வை வருடாந் தம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆலோசனைகளைப் பின்பற்றாத பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் பஸ்களிலும் ஏனைய வாகனங்களிலும் பிரசார பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான ஆலோசனைகள் 105 பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களை மீறிய 5 முறைப்பாடுகள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

28 பொலிஸ் பிரிவுகளின் கீழ், 105 பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் இம் முறை தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், ஆலோசனைகளை பின்பற்றாத பொலிஸ உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மின்சார விநியோகத்தைச் சீராக்க எரிசக்தி அமைச்சிடம் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் மின் தடங்கலை உடன் நிவர்த்தி செய்யுமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பட்டாலி சம்பிக்க ரணவக்கவின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த 3 வாரங்களுக்கு மேலாக இரவு, பகல் நேரங்களில் திடீர் மின்சாரம் தடைப்படுகின்றது. இதனால் மன்னார் மாவட்ட மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்தி மன்னார் மாவட்டத்திற்கு சீரான மின்சாரத்தினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


## அதிகரிக்கும் வீதி விபத்து; 6 மாதத்தில் 901 பேர் பலி

(கொழும்பு)

கடந்த ஆறு மாதங்களுக்குள் இடம்பெற்ற 17 ஆயிரத்து 556 வாகன விபத்துக்களில், 901 பேர் பலியாகியுள்ளதுடன், ஐயாயிரத்து 591 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் இரண்டாயிரத்து 447 பாரிய விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 37 ஆயிரத்து 496 விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாகவும், இதில் 2 ஆயிரத்து 630 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 12 ஆயிரத்து 451 பேர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் பொலிஸாரின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்திய திருவள்ளுவர் விழாவின் முதலாம் நாள் நிகழ்வு கிளி.மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.சிறிநிவாசன் மங்கள விளக்கேற்றுவதையும், சென்.தெரேசா கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும், அமரர் முன்னாள் அரச அதிபர் க.பொன்னம்பலத்தின் திருவுருவப்படத்திற்கு வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் மாலை அணிவித்து அஞ்சலி செய்வதனையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (112)

# மட்டக்களப்பில் ஆயுதங்களை வைத்துள்ளோர் அவற்றை உடனடியாக ஒப்படைக்க வேண்டும்

## இல்லையெனில் கடும் நடவடிக்கை என்கிறார் தளபதி

(கொழும்பு)

மட்டக்களப்பில் இன்னும் சில குழுக்களிடம் ஆயுதங்கள் உள்ளன. இந்த ஆயுதங்களை உடனயாக ஒப்படைக்க வேண்டும், இல்லையேல் தேடி அழிப்போம் என பாதுகாப்பு படைகளின் கிழக்கு கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் பொடிபஸ் பெரேரா தெரிவித்தார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு டேர்பா மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பிலுள்ள வங்கி உத்தியோகத்தர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான கூடடத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு புதூரில் இடம் பெற்ற வங்கிக்கொள்ளை சம்பவமானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்ட சம்பவமாகும். ஐந்து பேர் ஐந்து ஆயுதங்களுடன் வந்து வங்கியை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தான் கடந்த ஒன்றரை வருடங்களில் இவ்வாறான கொள்ளை சம்பவம், கப்பம் பெறும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இன்னும் சட்டவிரோதமான ஆயுதங்கள் நடமாடுகின்றன. அவைகளை கண்டு பிடிப்பதற்காக தேடுதல் நடவடிக்கைள், சுற்றிவளைப்புக்கள், வீதித்தடைகளைப் போடவேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு வங்கிக் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று களுவாஞ்சிக்குடியிலும் மற்றயது நேற்றுமுன்தினம் புதூரிலுமாகும். இவ் வங்கி கொள்ளை சம்வத்துடன் யார் தொடர்புபட்டிருந்தாலும் அவர்கள் விளைவுகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படும் என்றார்.

# திருவள்ளுவர் விழாவின் முதல்நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்புற நடைபெற்று நிறைவடைந்தது

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழச் சங்கத்தால் கொண்டாடப்படும் திருவள்ளுவர் விழாவின் முதல்நாள் நிகழ்வுகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன் தினம் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.சிறினிவாசன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உட்படப் பலர் ஏற்றி வைத்தனர்.

தொடக்கவுரையை தமிழ்ச்சங்கத் தலைவர் வே.இறைபிள்ளை நிகழ்த்தினார். வரவேற்புரையை துணைத் தலைவர் பொன. தில்லைநாதன் நிகழ்த்தி னார்.

திருக்குறள் கருத்துரைகள் ஒவ்வோர் தலைப்பில் இடம் பெற்றது. வள்ளுவத்துள் நட்பு எனனும் விடயம் பற்றி கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் லலீசன், வள்ளுவத்துள் முகாமைத்துவம் பற்றி யாழ். பல்கலைக்கழக கணக்கியல் துறைத் தலைவர் தி.வேல்நம்பியும், வள்ளுவத்துள் இல்லறம் பற்றி முனைவர் திருவாட்டி மனோன் மணி சண்முகதாஸும், வள்ளுவத்துள் ஒழுக்கம் பற்றி ஆசிரிய ஆலோசகர் ஆ.பௌநந்தியும், வள்ளுவத்துள் பழகும் மனிதப் பண்பாடு பற்றி உருத்திரபுரம் ம.வி.முதல்வர் இ.மீனலோசினியும் உரையாற்றினர். (112)

# வருடாந்த ஒன்றுகூடல்

பூநகரி ம.வியில் க.பொ.த உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் மாணவ தலைவர் எஸ்.லதுசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (112)

# 27வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கல்

(கொழும்பு)

மன்னார் கமநல அபிவிருத்தித் திணைககளத்தின் ஏற்பாட்டில் கமநல மேம்பாட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் காலை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 27 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் புலமைப்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம், மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சௌந்தரநாயகம், மேலதிக உதவி அரசாங்க அதிபர் திரேஸ்குமார், கமநல உதவி ஆணையாளர் சிவலிங்கம், உதவி மாவட்டச் செயலாளர் பரமதாஸ், இலுப்பைக்கடவை விவசாய அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் எண்ணெய் அகழ்வு

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் அகழும் பணிகள் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்த அகழ்வுப்பணிகளின்போது எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் வர்த்தக ரீதியான உற்பத்திக்கு குறைந்தது இன்னும் ஆறு வருடங்கள் செல்லும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

மன்னார் வடமேற்குக் கரையோரப் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பதற்கான எட்டு இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு இடங்கள் சீனா மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் மூன்று பாடசாலைகளில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள மூன்று பாடசாலைகளில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் பாடசாலை ஆகியவற்றின் கட்டடங்களே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடங்களை கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமார், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் வகுப்பறைத் தேவைகளை நிவர்த்திக்கும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமாரின் விசேட ஏற்பாட்டின் பொருட்டு வடக்கின் வசந்தம் - மீள் எழுச்சித்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வகுப்பறைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வுகளில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா, குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதே வேளை மேலும் 10 பாடசாலைகள் இவ்வாறு நிர்மாணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



மக்கள் வங்கியின் பொன்விழா நிகழ்வுகள் நேற்றையதினம் கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கி பிராந்திய தலைமையகத்தில் நடைபெற்றபோது விருந்தினர்கள் விளக்கேற்றுவதையும், விருந்தினர்கள், மதகுருமார் அமர்ந்திருப்பதையும், பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் 50 ஆவது நிறைவு விழா கேக்கினை வெட்டுவதையும், பிரிகேடியர் றொட்றிகோவுக்கு பிராந்திய முகாமையாளர் நினைவுப் பரிசு வழங்குவதையும், கலந்துகொண்ட வாடிக்கையாளர்களையும், (டூர)

# நுரையீரல் மீன்

நுரையீரல்மீன் (lungfish; salamander fish) நன்னீரில் வசிக்கும் ஊனுண்ணும் வகை யைச்சார்ந்த மீன் ஆகும். இதன் சிறப்பம்சம் என்ன வெனின் இது நீரில் சாதாரண



மீன்கள் சுவாசிப்பதனைப்போன்று சுவாசிப் பதுடன் மட்டுமல்லாது தரையிலும் சுவாசிக்கும் இயல்பைக்கொண்டுள்ளது, இதற்கென சுவாசப்பையும் கொண்டுள்ளது. இது வாழும் சதுப்புநில நீர்நிலையில் நீர் வற்றிவிட்டால் மண்ணைத் தோண்டிக்கொண்டு உள்ளே சென்றுவிடும் இந்த மீனால் மண்ணுக்குள் நான்கு ஆண்டு காலம் உயிர்வாழ முடியும். அப்போது தன் நுரையீரல்களைக்கொண்டு சுவாசிக்கும். தற்போது ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, தென் அமெரிக்க ஆகிய பிரதேசங்களில் மட்டுமே வசிக்கின்றது.

# காதைக் காதால் மூடும் சிறுவன்



வாயை மூடி திறப்பது போல், தன் காதுகளை காதால் மூடித்திறக்கும் சிறுவனின் செயலை பொதுமக்கள் அதிசயமாக பார்க்கின்றனர். கோவை மாவட்டம், வால்பாறை அடுத்துள்ளது ஈட்டியார் எஸ்டேட். இங்கு தொழிலாளி யாக வேலை செய்து வருபவர் கிருஷ்ணன். இவரது மகன் பிரேம்குமார் வயது (9), அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் 4 ஆம் வகுப்பு படிக்கிறார். இந்த மாணவர், தன் இரண்டு காதுகளையும் காதுக்குள் சொருகிய நிலையில் சக மாணவர்களை அசர வைக்கிறார். இரவுநேரத்தில் இரண்டு காதுகளை மூடிய நிலையில் தூங்கி விட்டு, காலையில் எழும் போது காது தானாக திறந்துவிடுகிறது. சிறுவன் எப்போது வேண்டுமானாலும் காதை காதுக்குள் சொருகி வைத்துவிட்டு, தன் படிப்பை முழு கவனத்துடன் படிக்கிறான். மற்ற மாணவர்களிடம் இருந்து தனித திறமை கொண்ட இந்த மாணவனின் செயலை சக மாணவர்கள் மட்டுமின்றி, அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களும் பொழுது போக்காக வேடிக்கை பார்க்கின்றனர்.

# அமர்ந்து வேலை செய்தால் ஆயுள்...

தினசரி 6 மணி நேரத்துக்கு மேல் உட்கார்ந்த இடத்திலேயே வேலை செய்யும் பெண்களின் ஆயுள் குறைய வாய்ப்புள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதர்களின் பெரும்பான்மையான வேலைகள் உட்கார்ந்த இடத்திலேயே செய்யும் அளவிற்கு முடங்கிவிட்டது. இவ்வாறாக வேலை செய்பவர்கள் எண்ணிக்கை உலக அளவில் பெருகி வருகிறது.

இதுகுறித்து 1.23 லட்சம் பேரை கடந்த 14 ஆண்டுகளாக அமெரிக்கன் கேன்சர் சொசைட்டி விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். அவர்களின் உடல் ஆரோக் கிய நிலைகளையும் கண்காணித் தனர். அதில் உட்கார்ந்த நிலையில் தொடர்ந்து 6 மணி நேரத்துக்கு மேல் வேலை செய் பவர்கள் மற்றும் எந்தவொரு உடற் பயிற்சியும் செய்யாதவர்க ளுக்கு இதய நோய், நீரிழிவு, நரம்பு தளர்ச்சி, உடல் பருமன் ஏற்பட வாய்ப் புள்ளது.



அவ்வாறாக தினசரி 3 மணி நேரம் உட்கார்ந்து இருக்கும் பெண்களை விட 6 மணி நேரத்துக்கு மேல் உட்காந்து இருக்கும் 40 சதவீதம் பெண்களின் ஆயுள் குறைய வாய்ப்புள்ளது. அதில் ஆண்க ளுக்கு 20 சதவீதம் வாய்ப் புள்ளது. உட்கார்ந்த இடத்தி லேயே வேலை செய்வதால் இளம் வயதில் இறப்பதற்கான சூழல் கூட ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# விரிய மூக்கு

ஒவ்வொரு மனிதனுக்கு எப்படி விதவதமான திறமைகள் இருக்கிறதோ அதற்கு எதிர்மாறாகப் பலர் பல விதம் விதமான குறைபாடுகளாலும் பாதிகப்பட்டுத்தான் இருக்கின்றனர். இந்த நபர் பெயர் Fei Jianjun என்பதாகும். இவருடைய தோற்றம் சற்று வித்தி யாசமாக காணப்படு கிறது.



காரணம் இவருக்கு சாதாரண மனிதர்களை போலல்லாது மூக்கு இன்றி காண்டா மிருகத் தின் மூக் கினைப் போன்று பருத்து வீங்கி காணப்படு கிறது. இந் நோயை ஆங் கிலத்தில் rhino carcinoma என அழைக் கப்படுகிறது. 40 வயது நிரம்பிய இந்த நபருக்கு இலவச மாக சத்திரசிகிச்சை செய்ய வைத்தியர்கள் தீர்மானித்துள்ளனர்.

இவருக்கு சத்திர சிகிச்சை வெற்றியளித்து சாதாரண மனிதர்களுடைய மூக்கினை போல வர நாமும் பிரார்த்திப் போம்.

# விதம் விதமான கூகுள் லோகோவை உருவாக்க


உங்களுடைய பெயரில் கூகுளின் இணையதளம் வந்தால் எப்படி இருக்கும். அந்த வசதியை ஒரு இணையதளம் நமக்கு செய்து தருகின்றது. இத்தளத்திற்கு சென்றவுடன் அதில் உள்ள Enter your Name Here என்கின்ற விண்டோவில் உங்களது பெயரை தட்டச்சு செய்யவும். அதன் கீழே உள்ள விண்டோவில் விதவிதமான எழுத்துருக்கள் இருக்கும். நமக்கு எந்த டிசைன் தேவையோ அந்த எழுத்தின் கீழே உள்ள ரேடியோ பட்டனில் கிளிக் செய்து என்டர் தட்டவும்.

சில வினாடிகளில் நமது பெயருடன் கூகுளின் இணையத்தளம் ஓப்பன் ஆகும். கூகுளின் லோகோ ஸ்டைலிலும் உங்களுடைய பெயரை கொண்டு வரலாம். நீங்களும் உங்களுக்கு விருப்பமான பெயரை தட்டச்சு செய்து வேண்டியவர்களுக்கு அதன் லிங்கை அனுப்பி வையுங்கள். அவர்கள் அந்த லிங்கை கிளிக் செய்கையில் அவர்களுடைய பெயர் அங்கு கிடைக்கும். இதை நீங்கள் தொடக்க பக்கமாக மாற்றிக் கொள்ளும் வசதியும் உள்ளது.

இணையதள முகவரி:- http://www.goglogo.info/

# தனது இதய சத்திர சிகிச்சையை தானே படம் பிடித்த நபர்!

பல புகைப்பட விருதுகளை வென்ற 41 வயதான Charles McQuillan தனது இதய சத்திர சிகிச்சையை படம் பிடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். பல கோணங்களில் இருந்தும் தன்னை நோக்கி கமராக்களை வைத்து Royal Victoria Hospital இல் இவர் இச்சாதனையை புரிந்துள்ளார். இதில் மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியது வெளிப்புறங்களை மட்டும் பிடிக்காமல் உடலினுள் மிகச்சிறிய நுண்துளை கமராவை செலுத்தி படம் பிடித்துள்ளார். மூன்று கமராக்களை அறையினுள்ளும் மற்றைய ஒரு கமராவை தன் குடும்ப உறவுகளின் மன நிலையை கண்காணிக்கவும் பொருத்தியுள்ளார். இவற்றை கட்டுப்படுத்தும் தொலை இயக்கியை தன்னுடன் வைத்திருந்தது ஆச்சரியமான விஷயம் தான்.



# அனைத்து தாவரங்களின் குண இயல்பை அறிய

தாவரங்கள் பற்றி நமக்கு தெரியாத தகவல்கள் மற்றும் அதன் குண நலன்களை படங்களுடன் அறிந்து கொள்ள ஒரு இணையத்தளம் உதவி புரிகிறது.

இயற்கை நமக்கு கொடுத்த ஒரு அரிய பொக்கிஷமதான் தாவரங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு பல அரிய மூலிகைகள் இன்றும் மனிதரின் பல நோய்களைக் குணப்படுத்தி வருகிறது. இப்படி நமக்கு தெரியாத தாவரங்களை படத்துடன் விபரமாக தகவல்களை கொடுக்க ஒரு தளம் உள்ளது.

இத்தளத்திற்கு சென்று நாம் வலது பக்கம் இருக்கும் Search என்ற கட்டத்திற்குள் எந்த தாவரத்தை பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமோ அதன் பெயரை கொடுத்து Search என்ற பொத்தானை சொடுக்கினால் போதும்.

அடுத்து வரும் திரையில் நாம் தேடிய தாவரத்தை பற்றிய முழுவிபரமும் நமக்கு கிடைக்கும். இந்த தாவரத்திற்கு வேறு என்ன பெயர்கள் எல்லாம் இருக்கிறது. எந்த நாட்டில் இந்தத் தாவரம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிவியல் பெயர்கள் மற்றும் இந்த தாவரத்தினால் நமக்கு ஏற்படும் நன்மை என்ன என்பது முதல் அனைத்து தகவல்களையும் கொடுக்கிறது.

பல இலட்சம் தாவரங்களின் தகவல்கள் இத்தளத்தில் உள்ளது. இனி நாம் எந்த தாவரத்தையும் விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம்.

இணையத்தள முகவரி:- http://www.theplantlist.org/

கணினி முனை

இந்தியச் செய்திகள்

# சட்டசபைத்தேர்தலில் தி.மு.க. தோல்வி; காரணத்தைக் கண்டறிந்தார் அன்பழகன்



(காஞ்சிபுரம்)

கடந்த சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க. தோல்வியுற்றதற்கு பலரும் வெவ்வேறு காரணங்களைக் கூறுகிறார்கள். ஆனால், உண்மைக் காரணம் பலருக்குத் தெரியாது. அதை நான் கூறுகிறேன் என்று கூறியுள்ள தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன், தலைசுற்ற வைக்கும் காரணம் ஒன்றைக் கூறியுள்ளார்!

இது ஜெயலலிதாவுக்கு கிடைத்த வெற்றி என்று பலர் சொல்கிறார்கள். பத்திரிகைகளும் அப்படியே எழுதுகின்றன.

ஆனால், அதில் உண்மையில்லை. ஜெயலலிதா வெறும் அம்பு மட்டும்தான்.

கடந்த தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடித்தவர்கள் துக்ளக் சோவும், தினமணி வைத்தியநாதனும்தான் என்று தனது கணிப்பை காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார் அன்பழகன்.

தி.மு.க. தேர்தல் அரசியலை நோக்கி இயங்கும் கட்சியல்ல. இது சமூக நீதிக்கான ஓர் இயக்கம். பகுத்தறிவு இயக்கம். கடந்த தேர்தலின்போது, துக்ளக் சோவும், தினமணி வைத்தியநாதனும் மக்களை மயக்கியதால் எமக்கு தோல்வி கிடைத்திருக்கிறது.

அந்த மயக்கத்தை எமது மாபெரும் இயக்கம்தான் மக்களிடமிருந்து போக்கவேண்டும் என்றும் அவர் பேசியிருக்கிறார்.

மாபெரும் இயக்கம், சமூக நீதிக்கான இயக்கம், பகுத்தறிவு இயக்கம் என்றெல்லாம் இவர் வர்ணிக்கும் ஒரு இயக்கத்தை, எவ்வித தொண்டர் பலமும் இலலாத துக்ளக் சோவும், தின மணி வைத்தியநாதனும் வீழ்த்தி யிருப்பதாக இவர் கூறுகிறாரே! இவருடைய மாபெரும் சமூகநீதி இயக்கம் அந்தளவுக்குப் பலவீனமாக இருந்தது? பேசாமல் துக்ளக் சோவை, தி.மு.க.வுக்கு தலைமை தாங்க வருமாறு கேட்கலாமே.

## தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகோரி கச்சதீவில் தேசியக்கொடி ஏற்றும் போராட்டம்

(புதுடில்லி)

தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கோரி கடல்முற்றுகைப் போராட்டம் நடத்துவோம். இதிலும் தீர்வு காணப்படவில்லை என்றால் கச்சதீவில் இந்திய தேசியக் கொடியை ஏற்றும் போராட்டத்தை நடத்துவோம் என தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் பொன்.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கச்சதீவு விவகாரம் இப்போது பெரும் சூடுபிடித்திருக்கின்றது. இந்த விவகாரம் குறித்துப் பேசுவதற்காக இலங்கை சென்ற இந்திய அதிகாரிகள் தீர்க்கமான முடிவெதையும் எடுக்கவில்லை. இவர்கள் இலங்கை அரசுடன் என்ன விடயங்களை கலந்துரையாடி உள்ளார்கள் என்ற விடயங்கள் முழுமையாக இந்திய மத்திய அரசால் வெளியிடப்படவில்லை. இந்த விடயத்தில் இந்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படையாக மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வாழும் கலை அமைப்பின் நிறுவனருக்கு ஜேர்மனியின் உயரிய விருது அறிவிப்பு



(புரூசெல்ஸ்)

உலகின் மிகப் பிரபலமான அரசியல் தலைவர்களுக்கு ஜேர்மன் அரசால் வழங்கப்படும் மிக உயரிய விருதான கிரான்ஸ் மோண்டானா பேரவை விருது, வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கருக்கு கடந்த 25ஆம் திகதியன்று வழங்கப்பட்டது. இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியர் என்ற பெருமையையும் ரவிசங்கர் பெற்றுள்ளார். இவ்விழாவில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அதிபர்கள், பிரதமர்கள், தூதுவர்கள் உள்ளிட்ட பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். இதற்கு முன் இந்த விருது ஜேர்மன் தலைவர் ஏஜெல்லா மெர்கல், இஸ்ரேலிய அதிபர் ஷிமோன் பெரஸ், பாலஸ்தீன விடுதலை இயக்க முன்னாள் தலைவர் யஷிர் அரபாத் உள்ளிட்ட தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2011ஆம் ஆண்டுக்கான கிரான்ஸ் மோண்டானா பேரவை விருது ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் மட்டுமின்றி ரோமானியா முன்னாள் பிரதமர் அட்ரியன் நாஸ்டாஸ், மனோதத்துவ நிபுணரும் எழுத்தாளருமான தாஹர் பென்ஜிலியன், ஆபிரிக்க பொதுச் செயலாளர் முகம்மது இபின் சம்பாஸ் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை இந்தியாவுக்கு வழங்கும் ரஷ்யா

(மொஸ்கோ)

உலகின் அதிநவீன அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. இத்தகவலை ரஷ்ய கடற்படைத் தளபதி விளாடிமிர் வைசோட்ஸ்கி கூறியுள்ளார்.

எனினும்,"நெர்பா" என்னும் அந்த நீர்மூழ்கிக் கப்பலை இந்தியாவுக்கு எப்போது வழங்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. இதுகுறித்து கருத்து தெரிவித்த ரஷ்ய கடற்படைத் தளபதி, இந்த ஆண்டு இறுதிக்குள் நிச்சயமாக அந்த நீர்மூழ்கிக் கப்பலை இந்தியாவுக்கு வழங்குவோம். அதை இயக்குவதற்கு ஏற்கெனவே இந்திய கடற்படை வீரர்கள் குழு ஒன்றுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

"நெர்பா" நீர்மூழ்கிக் கப்பலில் ஒரே நேரத்தில் 73 வீரர்கள் பயணம் செய்ய முடியும். அதிநவீன ஏவுகணைகளை கொண்ட நெர்பா தொடர்ந்து 100 நாட்களுக்கு தண்ணீருக்குள்ளேயே தங்கியிருக்கும் திறன் கொண்டது.

இதனிடையே, "அட்மிரல் கோர்ஸ்கோவ்" என்னும் விமானம் தாங்கிக் கப்பல் உள்ளிட்ட தளவாடங்களை வழங்குவதில் ரஷ்யா தொடர்ந்து தாமதம் காட்டி வருவதால் இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது. அந்த போர்க் கப்பலுக்கு ரஷ்யா அதிகளவான தொகையை வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது. கடைசி நிலைவரப்படி அட்மிரல் கோர்ஸ்கோவ்" கப்பலுக்கு 230 கோடி ரூபாய் செலுத்தப்பட வேண்டும் என ரஷ்யா கோரியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.


## கனிமொழி, முன்னாள் அமைச்சர் ராசா பிணையில் விடுவிக்கப்பட வேண்டும்

(சென்னை)

2 ஜி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள தி.மு.க. உறுப்பினர் கனிமொழி மற்றும் முன்னாள் அமைச்சர் ஆ.ராசா ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்படவேண்டும் என்று பா.ஜ.க.மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

யாராவது குற்றச்சாட்டுக்கு உள்ளானால், அது கொலை, திருட்டு போன்ற குற்றமாக இல்லாத நிலையில், விசாரணை நடைபெறும் சூழலில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிறையில் வைக்கப்படத் தேவையில்லை. ஏனெனில், நிரந்தரமாக அவர்களுக்கு பிணை வழங்க மறுக்க இயலாது.

பிணை என்பது குடிமக்களின் உரிமை. கனிமொழிக்கும் ஆ.ராசாவுக்கும் பிணை வழங்க்கப்பட வேண்டும். இது எனது தனிப்பட்ட கருத்து. பாஜகவின் கருத்து அல்ல. எனினும், அவர்களை நிரந்தரமாக சிறையில் வைக்க வேண்டும் என்று பா.ஜ.க கூறவில்லை என்றார்.



இலங்கைக்கு புகையிலைப் பண்டல்களை கடத்த தங்கச்சிமடம் அரியாங்குன்று கடற்கரையில் பதுக்கி வைத்திருந்த புகையிலைச் சிற்பங்களையும் கைதான நாகேந்திரன், புஸ்பா தனராஜைக் காணலாம்.

## காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின்பே இலங்கை தமிழர் பிரச்சினை எழுந்தது

### புதிய தமிழக கட்சித் தலைவர்

(சென்னை)

காங்கிரஸ் ஆட்சிப் பொறுபபை ஏற்றபின், இலங்கை தமிழர் பிரச்சினை எழுந்தது என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் இந்திய மீனவர்களை காப்பாற்ற முடியும். இல்லாத பட்சத்தில் தமிழர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்புக்கு மத்திய அரசு ஆளாக வேண்டியது இருக்கும்.

இதுகுறித்து தமிழக சட்ட சபையில் அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த இரு தீர்மானங்கள் வரவேற்கத்தக்கன. பா.ஜ. ஆட்சியில் இருந்தபோது, இலங்கை தமிழர் பிரச்சினை எழவில்லை. காங்கிஸ் கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றபின், இலங்கை தமிழர் பிரச்சினை எழுந்தது. காங்கிரஸ் அரசு தமிழருக்கு எதிரான மனப்போக்கை கொண்டதே இதற்கு காரணம் என்றார்.

# தெற்காசியாவில் அமைதி நிலவுவதற்கு காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்

## - பாகிஸ்தான் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

உலகச் செய்திகள்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத வரை, தெற்காசியாவில் அமைதி நிலவுவதற்கான வாய்ப்பு இல்லை என்று பாகிஸ்தான் இராணுவ உயரதிகாரி ஜெனரல் காலித் ஷமீம் வைனீ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில், தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய முப்படைகளின் கூட்டுத் தளபதி மேலும் தெரிவிக்கையில், காஷ்மீர் பிரச்சினையால், தெற்காசியாவில் நிலையற்ற தன்மை உருவாகியுள்ளது. ஆதலால், இப்பிரச்சினைக்கு தீர்வு காண நாம தொடர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்படி தீர்வு கண்டால், அது இந்தப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்களுக்கு மட்டுமின்றி, உலகளவில் வசிக்கும் ஆசிய நாட்டவர்க்கும் நல்லது. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரை, தெற்காசியாவில் அமைதி நிலவாது என்றார்.

## சந்திரனுக்கு கொண்டுசென்ற கமராவை விற்க முயன்ற விண்வெளிவீரருக்கு வழக்கு

(நாஸா)

சந்திரனுக்கு கொண்டு சென்ற கமராவை விற்க முயன்ற விண்வெளி வீரர் மீது நாசா விண்வெளி நிறுவனம் வழக்குத்தாக்கல் செய்துள்ளது. அப்போலோ 14 விண்கல பயணத்தின் போது சந்திரனுக்கு சென்ற விண்வெளி வீரர் ஒரு கமெராவை கொண்டு சென்றார். நிலாவுக்கு கொண்டு சென்ற அந்த கமெராவை அவர் 80 ஆயிரம் டொலருக்கு விற்க முயன்றார்.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து அந்த முன்னாள் விண்வெளி வீரர் மீது அமெரிக்க நாசா விண்வெளி மையம் வழக்கு தொடர்கிறது. எட்வர்ட் மிட்சல் என்ற அந்த விண்வெளி வீரர் நிலவின் தரைதளப்பகுதியை படம் பிடித்தார்.

அவர் முறைகேடாக அந்த கமெராவை நிலவு பயணத்தில் கொண்டு சென்றார் என நாசா குற்றம் சாட்டி உள்ளது. உரிய அங்கீகாரம் இல்லாமல் கொண்டு சென்ற அந்த கமெராவை சுயலாபத்திற்காக அந்த வீரர் விற்க முயன்றுள்ளார் என்றும் நாசா கண்டனம் தெரிவித்து உள்ளது.

## எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சு; ஏமன் ஜனாதிபதியின் கோரிக்கை நிராகரிப்பு



(சனா)

ஏமனில் ஆட்சி மாற்றம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தும்படி அமைச்சர்களுக்கு அந்நாட்டு ஜனாதிபதி அலி அப்துல்லா சலே உத்தர விட்டுள்ளார். இதேவேளை இந்த அழைப்பை ஏமன் எதிர்க்ட்சிகள் உடனடியாக நிராகரித்துள்ளன.

மன் நாட்டை 33 ஆண்டு காலம் ஆட்சி செய்துவரும் அதிபர் அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு இவரை ஆட்சியில் இருந்து விலகும்படி கடந்து ஐந்து மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு சர்வதேச நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்நிலையில் கடந்த மாதம் 3ஆம் திகதி தலைநகர் சானாவில் உள்ள அப்துல்லா சலேவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் காயமடைந்தார். தற்போது அவர் சவூதி அரேபியாவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் சலேயை ஏமன் வெளியுறவு அமைச்சர் அபுபக்கர் அல் குயிர்பி சந்தித்து பேசினார். சந்திப்பிற்கு பின் பேட்டியளித்த அல் குயிர்பி, ஆட்சி மாற்றம் தொடர்பாக அரசியல் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அதிபர் அறிவுறுத்தியுள்ளார் என்றார்.

அதிபர் சலேயின் இந்த அழைப்பை ஏமன் எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன. மேலும் அதிபர் பதவியில் இருந்து அப்துல்லா சலே விலக வேண்டும் என சவுதி அரேபியா உட்பட ஆறு வளைகுடா நாடுகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

இதனால் அப்துல்லா சலேவுக்கு இக்கட்டான சூழல் உருவாகியுள்ளது. சவுதி அரேபியாவில் சலே தற்போது சிகிச்சை பெற்று வருவதால் அவரது மகன் மற்றும் குடும்ப உறவினர்கள் அரசு மற்றும் இராணுவப் பதவிகளை வகித்து வருகின்றனர்.

## ஈரான், சிரியா பொலிஸாருக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத்தடை


(வொஷிங்டன்)

சிரியா ஆட்சியின் மனித உரிமை மீறல் செயல்களுக்கு ஆதரவு அளித்த அந்நாட்டு பொலிஸ் படை மற்றும் ஈரான் தேசிய பொலிஸாருக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. சிரியாவின் நான்கு பெரிய பாதுகாப்பு படைகளில் ஒன்றான சிரியா அரசியல் பாதுகாப்பு இயக்குனரகம் அந்நாட்டு உள்துறை அமைச்சகத்தின் துணை அமைப்பாக செயற்படுகிறது. இந்த அமைப்பினர் பெரியளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக புகார்கள் எழுந்தன. அதனால் இந்த படைப்பிரிவு மற்றும் சிரியா விமானப் படை புலனாய்வு பிரிவு மற்றும் ஈரான் தேசிய பொலிஸ் தலைவர் மற்றும் துணை தலைவர் மீது அமெரிக்கா நிதித்துறை பொருளாதார தடை விதித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் பயங்கரவாதம் மற்றும் நிதி புலனாய்வு பிரிவு செயலர் டேவிட் எஸ் கோகென் கூறுகையில், சிரியாவில் மனித உரிமை மீறல் செயல்களுக்கு ஈரான் நாட்டு இராணுவம் மற்றும் பாதுகாப்பு படை ஆதரவு அளித்து வருவது குறித்த தகவல்கள் கிடைத்துள்ளன.

அமைதியான வழியில் கிளர்ச்சியாளர்கள் போராட வழிவிட வேண்டும். வன்முறைக்கு முடிவு கட்டி ஆட்சி மாற்றத்திற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை அந்நாட்டு அதிபர் பஷர் அல் அசாத் எடுக்க வேண்டும். இதற்காகவே தற்போது இரு நாட்டு பொலிஸ் படை மீது பொருளாதார தடை கொண்டு வரப்பட்டுள்ளது. சிரியா மக்களுக்கு உரிமைகள் கிடைக்க அதிபர் அசாத் உறுதி அளிக்க வேண்டும் என்றார்.

## சிறுகோள்கள் பூமியில் மோதினால் 30 நாடுகள் அழியுமென எச்சரிக்கை



(லண்டன்)

விண்வெளியில் உள்ள சிறு கோள்கள் பூமியில் மோதுண்டால் பேரழிவிற்கு உள்ளாகக்கூடிய நாடுகளின் பட்டியலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். பிரித்தானியாவின் சவுத்ஹெம்டன் பல்கலைக்கழக நிபுணர்களே இப்பட்டியலை வெளியிட்டுள்ளனர். இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் பாரிய அழிவுகளைச் சந்திக்கலாமெனவும் அதன் மூலம் அந்நாடுகள் மீளமுடியாமல் போகுமெனவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சீனா, இந்தோனேசியா, ஜப்பான், இந்தியா, பிலிப்பைன்ஸ் இத்தாலி, பிரித்தானியா, பிரேசில், நைஜீரியா அமெரிக்கா ஆகிய நாடுகள் இதில் குறிப்பிட்டுள்ளன. இத்தகைய சிறு கோள்கள் தாக்குதலுக்குள்ளானால் அங்கு பாரிய உயிரிழப்புக்கள் நிலவும் சாத்தியம் நிலவுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இத்தாக்குதலின் போது நாடுகளின் பொதுக்கீழ் கட்டுமான வசதிகளும் பாரிய அழிவிற்கு உள்ளாகுமெனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. சுமார் 12 மைல்கள் விட்டமுடைய சிறுகோளொன்று பூமியில் மோதுண்டால் இங்குள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்தும் முற்றாக அழிவடையுமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய ஒரு தாக்குதல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாகவும் இதன் போதே டைனோசர்கள் முற்றுமாக அழிந்தாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## சீனாவில் தொலை தூரங்களை இணைக்க அதிவேக புல்லட் ரயில் சேவை ஆரம்பமானது

(பீஜிங்)

சீனாவின் அதிவேக புல்லட் ரயில் சேவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்தப்புகையிரம் 10 மணி நேரத்தில் செல்லவேண்டிய தூரத்தை 5 மணிநேரத்தில் செல்லக்கூடியது. இதனையடுத்து விமான சேவைகள் தமது கட்டணங்களைக் குறைத்துள்ளன.

சீனாவின் தொலை தூரங்களை இணைக்கும் வகையில், 2020ஆம் ஆண்டிற்குள், 16 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவிற்கு புகையிரதப்பாதைகள் அமைக்க திட்டமிடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக உலகிலேயே அதிவேகமாக செல்லக் கூடிய புல்லட் ரயில், பீஜிங் - ஷாங்காய் இடையில், 1,318 கி.மீ. தூரத்திற்கு முதல் பயணத்தை ஆரம்பித்தது.

பீஜிங் - ஷாங்காய் இடையே, அதிக மக்கள் தொகை கொண்ட, ஏழு மாநிலங்கள் மற்றும் தொழில் நகரங்களை இந்த ரயில் கடந்து செல்லும். இதனால், இப்பகுதியில் அதிகளவில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஓராண்டு தாமதத்திற்கு பின், நேற்று இயக்கப்பட்ட இந்த ரயிலில், ஆண்டுக்கு எட்டு கோடி பேர் பயணம் செய்வர் என கணக்கிடப்பட்டுள்ளது.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கி, 90ஆவது ஆண்டு விழா, இன்று கொண்டாடப்படுவதை, முன்னிட்டு இந்த புல்லட் ரயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ”பீஜிங் - ஷாங்காய் புல்லட் ரயிலுக்கான பாதை அமைக்க, 1 இலட்சத்து 46 ஆயிரத்து, 250 கோடி ரூபாய் செலவானது. தினசரி இந்தப் பாதையில் மணிக்கு, 300 கி.மீ. வேகத்தில் 67 ஜோடி ரயில்களும், 250 கி.மீ., வேகத்தில் 27 ரயில்களும் இயக்கப்படும்.

## அறிவிற்கும் உண்டோ அடைக்கும் ....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

லைனக்ஸின் வருகையை ஒரு வரப்பிரசாதமாகவே கருதியது. இன்னொரு பக்கம் முதன்மைக்கு ஏங்கும் ஓரகிள் (இதன் நிறுவுனர் எல்லிசன் பேரவாவின் மறு உரு. இவரது வாழ்க் கையைப் பற்றி எழுதிய ஆசிரியர் சொல்லுகிறார்: ‘கடவுளுக்கும் எல்லிசனுக்கும் உள்ள ஒரே வேற்றுமை கடவுள் தன்னை எல்லிசன் என்று நினைத்துக் கொள்வதில்லை’), இன்னும் எச்.பி சன் என்று எட்டு பெரிய பெயர்கள் லைனக்சை ஆதரிப்பது என்று முடிவு செய்தனர்.

இருந்தும், லைனக்ஸ் விண்டோஸைப் போன்ற வெகுஜன ஆதரவைப் பெறவில்லை என்பது உண்மை. இலவசமாகத் தரப்பட்டாலும், அவை வெகுஜன ஆதரவைப் பெறாததன் காரணம், வாங்கிய பொருளின் குறைகளைத் தீர்க்கவும், அவற்றில் மேன்மேலும் அதிகத்திறனைக் கொண்டு வருவதற்கும் யார் பொறுப் பேற்பர் என்ற பயனீட்டாளர் அச்சமே. விண்டோஸில் பிரச்சினை என்றால் மைக்ரோசொப்டை அணுகலாம். சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எந்த நிறுவன அமைப்புமின்றி உருவாக்கிய பொருளைப் பயன் படுத்துவதில் பயனீடாளர் தயக்கம் காட்டினர்

லைனக்ஸ் முகப்புக் கணினிகளில் பேராதரவு பெறவில்லை என்பது உண்மை. ஆனால் தரவுத் தளங்களைத் தாங்கும் பெரும் கணினிகளில் விண்டோஸைப் பெரிதும் விஞ்சிவிட்டது. ஸுபர் கம்யூட்டர் என்று சொல்லப் படும் மஹா கணினிகளில் முதல் 500 இல் 446 கணினிகள் ஓடுவது லைனக்ஸில். ஹொலிவுட்டில் 95மூ கணினிகள் லைனக்ஸில் ஓடுகின்றன. அனிமேஷன் என்று சொல்லப்படும் அசைவூட்ட மென்பொருட்களுக்கு அதிகமான கணினிச் சக்தி தேவை. அது லைனக்ஸில் கிடைக்கிறது. உலாவிகளில் (Browser) ∴பையர்∴. பொக்ஸ் இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரரை விட விரைவான செயல்பாடு உடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்னதின் ஆதிக்கத்தை முறியடித்துக் கொண்டிருக்கிறது. ∴பேஸ்புக், ட்விட்டர், விக்கிபீடியா இவை எல்லாம் திறந்த வெளி நிரல்களின் வெற்றிக்கு எடுத்துக்காட்டுகள். இவை ஒவ்வொன்றும் பிரம்மாண்டமான அளவில் தரவுகளைத் தன்னிடத்தே அடக்கி வைத்துச் செயல்படுபவை.

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லமுடியும். ஸ்டால்மன், டோர்வால்ட்ஸ் போன்றவர்கள் காட்டியிருக்கும் சிந்தனைப் போக்கு ஒரு புது வழியை வகுத்திருக்கிறது. ஞானப் பதுக்கலை எதிர்த்து இவ்வியக்கங்கள் குரல் கொடுத்திருக்கின்றன. ‘தடையற்ற ஞானப் பகிர்வே எங்கள் கலாசாரத்தின் சாரம். ரோயல்டி, பேடன்டுகளெல்லாம் மேற்கத்திய கலாசாரம் நம்மிடையே விதைத்த விஷ விதைகள். ஞானம் என்ற அக்கினிக் குஞ்சை அங்கோர் காட்டிலோர் பொந்திடை வைத்தல் மடமை அன்றோ? வாருங்கள் சோதரரே, ஞானப் பொதுவுடமை என்ற தாரகத்துடன் புதிய உலகம் சமைப்போம். தத்திகிட, தத்தரிகிட தித்தோம்..

# அறிவிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

கடந்த முப்பது ஆண்டுகளாக மென் பொருள் துறை பொருளாதாரத்தில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் ஏராளம். தொழிற்புரட்சி காலத்திலி ருந்து நாம் பொருள் உற்பத்தியைப் பற்றிக் கொண்டிருந்த பல நம்பிக்கை களையும், கோட்பாடுகளையும் மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

முதலில் சரியாக வேலை செய்யக் கூடிய மென்பொருளை உருவாக்குவது தான் கடினம். அந்த முதல் ஒன்று உருவாகி விட்டால், அதனுடைய நகல்கள் நொடிப் பொழுதில் உரு வாகிவிடும். எத்தனை முறை பக்கம் பக்கமாகக் கொப்பி ' பேஸ்ட்' (copy. paste) செய்திருக்கிறோம்? அறிக்கை யாகட்டும், கோரிக்கைகளாகடடும் எல்லாமே இந்த கொப்பி - பேஸ்ட் முறையில் துரிதமாக உருவாகி விடுகின்றன.

கொப்பியடிப்பவனுக்கு இது ஆதா யம் என்றால், முதலில் உழைத்து உருவாக்கியவன் முட்டாளாகி விடுகி றான். மனசாட்சியை முன்னிறுத்திச் சொல்லுங்கள்: எத்தனைமுறை மென்பொருளை விலை கொடுத்து வாங்கியிருக்கிறீர்கள்? நம்மில் பெரும்பாலாரிடம் நண்பனிடமிருந்து கொப்பியடிக்கப்பட்ட மென்பொருட்கள்தான் அதிகம். இதனால் கொப்பி ரைட் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் கொப்பியடிப்பது வெகுவாகக் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது.

இந்த 'கொப்பி - பேஸ்ட்' உலகத்தில் தம்முடைய படைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மென்பொருள் நிறுவனங்கள் நினைப்பது நியாயமே. சநதையில் நீங்களும் நானும் வாங்கும - உபயோகிக்கும் மென்பொருளில் அவர்கள் எவ்வளவுதான் கட்டுப்பாடு கொண்டு வந்து விடமுடியும்? சி.டி யிலிருந்து நீங்கள் லபக்-லபக்கென்று களவாடி (மன்னிக்கவும்: சடடப்படி அது களவாடல்தான்) உங்கள் வன் தகட்டை நிரப்பி விடுவீர்கள்? எந்தப் பொலிஸுக்கு என்ன தெரியும்? நேற்று வந்த படங்கள் இன்று கடையில் ஐம்பது ரூபாய் சி.டி.யாக வந்து விடுகின்றனவே?

ஆனால், படத்தயாரிப்பாளர் களுக்கு இல்லாத ஒரு சௌகரியம் மென்பொருள் தயாரிப்பாளர்களுக்கு உண்டு. இவர்கள் சந்தையில் விற்பது பூடகமான உருவில் உள்ள, கணினி கள் மட்டுமே படிக்கக்கூடிய நிரல்கள. இந்த நிரல்களை நீங்கள் உங்கள் கணினியில் உபயோகிக்கலாம்.

ஆனால், படிக்க இயலாது. அதைத் தட்டி ஒட்டி உங்கள் தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று நினைத்தீர்களானால், ஊஹூம், அதற்கு இந்த மென் பொருளின் மூல நிரல்கள் தேவை. அதை உற்பத்தி நிறுவனங்கள் உங்களுடன் பகிர்ந்துகொள்ள முன்வரா.

உபயோக அளவில் கொப்பியடிப் பதை ஓரளவே கட்டுப்படுத்த முடிந் தாலும், மூல நிரலைப் பத்திரமாகப் பாதுகாப்பதின் மூலம் மென்மேலும் அதிகமான பண்புக்கூறுகளைத் தம் மென்பொருளில் சேர்த்து தம்முடைய தனித்தன்மையை ஒரு மென்பொருள் நிறுவனம் பாதுகாத்துக்கொள்ள முடியும். இதுகூட இல்லாவிட்டால், மென்பொருள் உற்பத்தியாளர்கள் பிழைப்பது எப்படி? இது நியாயமானது தான் என்று தோன்றுகிறதல்லவா?

தொழில் உலகப் பொருளாதாரத தின் அடிப்படை நியாயம் போல் தோன்றும் இந்த வாதத்தை மறுத் தார் ரிசர்ட் ஸ்டால்மன் என்ற கணினி விற்பன்னர். தம்மைத் 'தகவல் ஊடுருவி' என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொண்ட ஸ்டால்மன், மென்பொருள் தொழில் முறைகளை மாற்றியமைக்க விழையும் தீவிரவாதி. மூல நிரல்கள் மறைத்து வைக்கப் படுவதால், ஒரேவிதமான மென் பொருள் செய்யும் ஒவ்வொரு நிறுவன மும், ஒரேவிதமான செயற்பாடுகளுக் காக தனித் தனியாக நிரல்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. சமூகக் கண்ணோட்டத்தில் பார்த் தால், இது மிகப் பெரிய விரயம். ஒரு நிறுவனத்தின் மென்பொருள் மூல நிரல்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டால், அந்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அந்த மூல நிரல் களை மேலும் மேலும் செப்பனிட்டு, அதிகமான செயற்பாடுகளுடன் ஒரு மேன்மையான மென்பொருளைக் குறைந்த நேரத்தில் உருவாக்கித் தர முடியும்.




இதுதானே சமுதாயத்திற்குத் தேவை? நல்லது? இத்தகைய சமூக நன்மையை மறுத்து, மூல நிரல்களைத் தம்முடைய சொத்து களாகப் பதுக்கி வைக்கும் நிறுவனங் களை எதிர்த்துக் குரல்கொடுத்தார் ஸ்டால்மன். அவர்களுடைய செயல் அதர்மமானது என்று ஆணித்தரமாக வாதாடினார். மூல நிரல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது என்பது புதியது அன்று. யூனிக்ஸின் ஆரம்ப நாட்களில் அதை உருவாக்கிய ஏ.டி, ரூ டி அம்மென்பொருளை மூல நிரலுடன் வழங்கியது. பின்னர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலிருந்து பெர்கலி மென்பொருள் விநியோகம் என்ற திட்டத்தின் கீழ் யூனிக்ஸ் மூல நிரலுடன் மாற்றியமைக்கும் - விற்கும் உரிமையுடன் மலிவு விலையில் விற்கப்பட்டது. இப்படி உருமாறிய எல்லா மென்பொருளுமே யூனிக்ஸ் என்ற பெயரில் விற்கப்படுமானால், குழப்பம் வரலாம் என்ற நோக்கத்துடன் அந்தப் பெயரின் உரிமையை மட்டும் தங்களுடனேயே வைத்துக் கொண்டனர். இதனால்தான் யூனிக்ஸ் என்ற பொதுப் பெயரால் அது அறியப் பட்டாலும், ஒவ்வொரு நிறுவனத்தி லிருந்து வரும்போதும் அய்க்ஸ், அல்ட்ரிக்ஸ் என்று வெவ் வேறு பெயரைத் தாங்கி வரும்.

ஸ்டால்மனின் எதிர்ப்பு வார்த் தைகளுடன் மட்டும் நின்று விட வில்லை. புரூே என்ற இயக்க அமைப்பை உருவாக்கி அதற்கு பொது உரிமப்படி மூல நிரலை விநியோகித் தார். GNU என்பது புரூே is Not Unix என்பதன் சுருக்கம்.

அது என்ன பொது உரிமம்? இதன் கீழ் நான்கு விதமான உரிமைகளை வழங்கினார் ஸ்டால்மன். முதலாவ தாக எல்லோரையும் வாருங்கள் தோழர்களே, இதைப் பயப்படாமல் கொப்பியடித்து உபயோகியுங்கள் என்றார். இப்படி வழங்கப்படும் மென்பொருளோடு மூல நிரல்களும் வழங்கப்படும். அதனைப் பார்க்கவும், அதில் மாறுதல்கள் செய்யவும் பயனீட்டாளருக்கு உரிமை உண்டு. அது மட்டும் அல்ல, இவர் கொடுக் கும் மூல நிரலை ஒரு பகுதியாக வைத்து எழுதப்படும் மென்பொருளை மற்றவர்க்கு விற்கவும் அந்தப் பயனீட்டா ளருக்கு உரிமை உண்டு - முதல் மூல நிரலை உருவாக்கிய வர்க்கு ரோயல்டி எதுவும் கொடுக்காமல். நீங்கள் மூல நிரலை இலவசமாகப் பெற்றிருந்தாலும், அதனை உள்ள டகக் நீங்கள் தயாரிக்கும் மென் பொருளை விற்க உங்களுக்கு உரிமை உண்டு. இந்த உரிம முறை copyleft என்று வர்ணிக்கப்படு கிறது. கொப்பிரைட்டுக்கு எதிராக இப்படி ஒரு குதர்க்கமான பெயர்!


அடம் ஸ்மித் காலத்திலிருந்து நம்பப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகளை மறு பரிசீலனை செய்யத் தூண்டிய கார்ல் மார்க்ஸின் சித்தாந்தங்களைப் போல், ஸ்டால்மனின் புதிய கோட்பாடுகள் லாப நோக்குடன் நிறுவப்பட்ட மென்பொருள் நிறுவனங்களின் வியாபார அடிப்படையையே தகர்ப்பதாக அமைந்தன. சும்மா விடுமா இந்த நிறுவனங்கள்? பொரு ளாதாரப் போட்டியை ஓர் யுத்தமாக நடத்தும் மைக்ரோசொப்ட் போன்ற நிறுவனங்கள் ஸ்டால்மனை ஓர் எதிரி யாகவே பார்க்கத் தொடங்கின. வியாபார நோக்கின்றி மென்பொருள் உற்பத்தி செய்யப்படுமாயின், அது தரத்தைப் பாதிக்கும். பொருள் உற் பத்திக்குப் பொருளாதார நோக்கம் தேவையில்லை என்று சொல்வது ஒரு பெரிய லட்சியமாக மேடைக ளில் பேசப்படலாம். ஆனால் நடை முறைக்கு ஒத்துவராது என்றெல்லாம் வாதிட்டன.

ஸ்டால்மனும் விடவில்லை. எல்லா மென்பொருளும் சுதந்திர அடிப்படையிலேயே விநியோகிக்கப் பட வேண்டும் என்ற கருத்தை நாடு நாடாகச் சென்று மேடை போட்டு பிரசாரம் செய்யலானார். தஙகள் அனுமதியின்றி மென்பொருளை நகல் எடுப்பது சட்டத்திற்கும், நியாயத் திற்கும் புறம்பானது என்று மென் பொருள் நிறுவனங்கள் வாதாடுமேயா னால், அதைவிடப் பெரிய அதர்மம் அத்தகைய நகலெடுப்பை அனுமதிக் காமல் அறிவு வளர்ச்சியைத் தடுப்பது என்று குற்றம் சாட்டினார்.

ஸ்டால்மனின் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பலரும் கூட அவருடைய இந்தத் தீவிரவாத தத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டு வரு வதற்குத் தடையாக இருப்பதாகவே கருதினார்கள். புரட்சி ஒன்று செய்து புதிய உலகம் காணக் கனவு கண்டு கொண்டிருந்த ஸ்டால்மனை விட்டு விலகி open source initiative (திறந்த நிரல் முனைப்பு) என்ற அமைப்பைத் துவக்கினார்கள். வியாபார நோக்கு டைய நிறுவனங்கள் மீது இவர்க ளுக்கும் கடுமையான வெறுப்பு உண்டு. ஆனால் அந்த 'தீய சக்தி களை' முறியடிக்கும் வழி பிரசாரம் அன்று, அந்நிறுவனங்களுக்கு இணையாகப் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றின் மூல நிரல்களை விநியோகித்து, போட்டியாளர்களை விட வேகமாகச் சிறந்த பொருட்க ளைத் தயாரிப்பதே என்று நம்பினார் கள் இந்தத் தொழில்நுட்ப விற்பன்னர்கள்.

இந்த அமைப்பில் முக்கியமானவர் லைனஸ் டோர்வால்ட்ஸ். இவர் தனனுடைய முதுநிலைப் பட்டத்துக்காக ஓர் இயக்க அமைப்பை உருவாக்கி னார். யூனிக்ஸ் போன்ற இந்த இயக்க அமைப்பைத் (யூனிக்ஸின் மூல நிரல் வெகு ஜனமாகப் பலருக்கும் கிடைத்தபடியினால் பல மென்பொருட் கள் யூனிக்ஸை ஒட்டி உருவாகின) தன்னுடைய பெயரையும் சேர்த்து லைனக்ஸ் என்று அழைத்தார்.

பட்டப்படிப்புக்காக உருவாக்கிய மென்பொருள் மற்றவருக்கும் பயன் படட்டுமே என்ற பரந்த நோக்குடன் அதன் மூல நிர்லை இணையத்தில் பதிப்பித்தார் டோர்வால்ட்ஸ். இதில் எந்த மாற்றம் செய்ய விரும்புபவர் கள் அவ்வாறு செய்ய உரிமை உண்டு என்ற ஸ்டால்மனின் தத்துவத்தை நடைமுறையாக்கினார். லைனக்ஸின் இந்த உருவாக்கம் மென்பொருள் தயாரிப்பிலேயே ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. விண்டோஸுக்கு சவால் விடும் அளவில் திறன்மிகு இயக்க அமைப்பாக, எளிய முகப்புடன், வலுவான பாதுகாப்பு கவசத்துடன் (பாதுகாப்பு விஷயத்தில் லைனக்ஸ் விண்டோஸை விடவும் சிறந்ததாகக் கருதப்பட்டது) லைனக்ஸ் அவதரித்தது. லைனக்ஸின் இந்த அவதாரம் ஒன்றைப் புரிய வைத்தது. நோக்கங் கள் மெய்ப்பட மேலேசொன்ன எல்லாக் காரணங்களையும் விட பெரிய ஒரு காரணம் எதிரி ஒருவனை அடையாளம் கண்டு கொள்வதே. பங்கேற்கும் யாவருக்கும் பொதுவான எதிரி ஒருவன் இருக்கும் பட்சத்தில், வெறியுடன் சீர்மிகு பொருள் உற்பத்தி செய்ய இயலும். பில் கேட்ஸை இவர்கள் எல்லோருமே தீய சக்தி யென வெறுத்தனர். அவருடைய சாம்ராச்சியத்தைத் தகர்த்தெறிவதில் தமக்கும் பங்கு வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அதுவே லைனக்ஸின் வெற்றிகரமான உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தது.




லைனக்ஸின் வெற்றி மென் பொருள் தயாரிப்பில் ஒரு நம்பிக் கையான வேற்று முறையாகி, இன் னும் பல பொருட்கள் வருவதற்கு வித்திட்டது. அவற்றை இங்கு பட்டியலிடப் போவதில்லை. இணை யத்தில் ஓபன் ஸோர்ஸ் என்று கேட்டீர்களானால் அனுமார் வால் போல நீளமாக வந்து கொண்டே இருக்கும் - நிரல் மொழிகளின் இன்றைய நாயகன் ஜாவா உட்பட.


இந்த திறந்த மூலநிரல் விழை வாளர்களுக்கு எதிர்பாராத இடத்தில் இருந்து ஆதரவு வரத்தொடங்கியது. என்னுடைய எதிரிக்கு எதிரி என் நண்பன் என்ற அடிப்படையில், மைக்ரோ சொப்டின் சவாலற்ற முதன்மையால் இரண்டாம், மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்ட நிறுவனங்க ளும், அதன் ஏகபோக ஆதிக்கத்தால் பேரச் சக்தியை இழந்து நின்ற வன்பொருள் நிறுவனங்களும் கைகோர்த்துக் கொண்டு இந்த லைனக்ஸ் குழந்தையை ஆரத்தி எடுத்து வரவேற்றன.

தன்னுடைய படைப்பான பி.சிக் காக இயக்க அமைப்பைத் தயாரிக்க வந்த குத்தகைக்காரர் இன்று தம்மை விட அதிக வருவாய் வரக்கூடிய நிறுவனமாக மாறி விட்டதை நினைத்து நினைத்துப் பொருமிக் கொண்டிருந்த ஐ.பி.எம்,

(13 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக் குற்ற விசாரணைகளை முன்னெடுக்க இலங்கை அரசு தாமதிக்கக் கூடாது

## நவநீதம்பிள்ளை இப்படிக் கூறுகிறார்



(கொழும்பு)

யுத்தகுற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய இலங்கை அரசாங்கம் நீண்ட காலம் எடுத்துக் கொள்ளக் கூடாது என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மேலும், நம்பகரமான விசாரணைப் பொறிமுறையொன்றை முன்னெடுக்கத் தவறினால் சர்வதேச நாடுகளின் நடவடிக்கைகளுக்கு இலங்கை முகம் கொடுக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தகுற்றச்சாட்டுகள் மற்றும் கைதிகள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கை தீவிரமாக விசாரிக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் முன்னர் நடத்தப்பட்ட உள்ளக விசாரணைகள் முழுமை பெறாமல் தோல்வியடைந்ததாகவும், அத்தகைய விசாரணை அறிக்கைகள் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை என்றும், ஒருவருக்கேனும் தண்டனை கொடுக்கப்படவில்லை என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குற்றம்சாட்டியுள்ளார்.

அதுபோன்றே மீண்டும் நடந்தால், அனைத்துலக சமூகத்தின் தலையீட்டின் மூலம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள நவநீதம்பிள்ளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இந்த விவகாரத்தில் தீவிரமாகச் செயற்படும் என்று தான் உறுதியாக நம்புவதாகவும் கூறியுள்ளார்.

## இலங்கைக்கு பேரீச்சம்பழம்



(கொழும்பு)

சவுதி அரேபிய அரசாங்கம் புனித ரமழானை முன்னிட்டுஇலங்கைக்கு 150 மெற் றிக் தொன் பேரீச்சம் பழத்தை அன்பளிப்புச் செய்துள்ளது.

இதனை சவுதி அரேபியாவின் நிதி அமைச்சின் பிரதிநிதி மன்ஸூர் இப்னு ஸாலி அல் யூசுப் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியிடம் சவுதி தூதரகத்தில் வைத்து நேற்று முன்தினம் கையளித்தார்.

சவுதி அரேபியாவின் சார்ஜ் எபயார்ஸ் பாறூக் அலி மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம். நவவி ஆகியோர் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அதிவேக ரயில் சேவை சீனாவில் அறிமுகம்

(கொழும்பு)

சீனா நவீன அதி வேக புல்லட் ரயிலை நேற்று முன்தினம் அறிமுகம் செய்தது. சீனாவின் பீஜிங் மற்றும் ஷாங்காய் நகரங்களுக்கு இடையே பயணத்தை துவக்கியது.

இதற்குப் போட்டியாக விமான நிறுவனங்கள் கட்டணங்களை குறைத்துள்ளன. சீனாவின் தொலை தூரங்களை இணைக்கும் வகையில் 2020ஆம் ஆண்டிற்குள் 16 ஆயிரம் கி.மீ. தொலைவிற்கு ரயில் பாதைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக உலகிலேயே அதிவேகமாக செல்லக்கூடிய புல்லட் ரயில் பீஜிங் - ஷாங்காய் இடையில் 1318 கி.மீ. தூரத்திற்கு முதல் பயணத்தை நேற்று முன்தினம் துவக்கியது.

10 மணி நேரத்தில் அடைய வேண்டிய தூரத்தை இந்த ரயில் 5 மணி நேரத்தில் சென்றடையும்.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி துவங்கி 90ஆவது ஆண்டு விழா நேற்றுக் கொண்டாடப்படுவதை முன்னிட்டு இந்த புல்லட் ரயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆனி உத்திர விழா

நாகேஸ்வரம், அளவெட்டிக்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை ஆனி உத்தர விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

8.00 மணிக்கு விடேச அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். காலை 9.00 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு நடைபெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயணர் ஸ்ரீதேவி, பூமாதேவி புடை சூழ அலங்காரத் தண்டிகையில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும் (68)

## மேற்பார்வையாளர்கள் நேற்று முதல் நியமனம்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நான்கு மேற்பார்வையாளர்கள் நேற்று முதல் சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் இரண்டு நிரந்தர மேற்பார்வையாளர்களும், இரண்டு தற்காலிகமான மேற்பார்வையாளர்களும் அடங்கலாக நான்குபேர் கடமையாற்றி வந்தனர்.

இருந்தும் இவ் வைத்தியசாலையின் மேற்பார்வையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவிவந்தமையை அடுத்து, சுகாதார அமைச்சினால் மேலும் நான்கு மேற்பார்வையாளர்கள் நேற்று முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

### பணத்துக்காகவே...

பேசும் இவர்களுக்கு பணம் கிடைக்காவிட்டால் இவ்வாறு பேச மாட்டார்கள். தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கு அதிக பிரச்சினைகள் உள்ள இச்சந்தர்ப்பதில், அதை பேசாமல் இலங்கை தமிழர் விடயத்தை இந்திய தமிழ்த் தலைவர்கள் பேசுகின்றனர் என அவர் தெரிவித்தார்.

ஆரம்ப காலத்தில் ஈழத்து போரட்டத்திற்கு ஆதரவாக பிரசாரங்களை நான் மேற்கொண்டேன். 1989ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பேசியுள்ளேன். எனினும் அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை கட்டவிழ்த்தமையால் போரட்டத்திற்கு ஆதரவளிப்பதை தவிர்த்தேன் என அவர் கூறினார்.

இந்துவாக பிறந்த இவர், பின்னர் பௌத்த சமயத்தை தழுவினார். கடந்த வருடம் இஸ்லாத்தை தழுவிக் கொண்ட பேராசிரியர் அப்துல்லாஹ், பிரச்சாரம் மேற்கொள்ளும் பொருட்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரசாரங்களை மேற்கொண்டு வரும் பேராசிரியர் அப்துல்லாஹ்வை செய்தியாளர்கள் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### தேர்தல் வன்செயல்...

மூலமாக யாழ், கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வன்முறைகள் குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளையும், தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்தில் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகளையும், யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளையும் விசாரித்து அதற்கான நடவடிக்கைகளை பொலிஸாரின் உதவியுடன் நடைமுறைப்படுத்த இப்பிரிவு தேவையான எல்லா ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

அத்துடன், தேவையேற்படு மிடத்து சம்பவ இடத்திற்கு நேரடியாக இக்குழு விஜயம் செய்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தேர்தல் தொடர்பாக கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள், பொது மக்கள், 0213211620 என்ற தொலைபேசி இலக்கத்துடன் எந்த நேரமும் தொடர்புகொண்டு தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் எனவும் அவ் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (பா)

### எனக்கு எதிராக...

கூட்டமைப்பில் இருந்து பிரிக்கமுடியாது எனவும், சுயநல அரசியலுக்காக தனது பெயரை கலங்கப்படுத்துவதாகவும் என்னை ஒருபோதும் அரசியலில் இருந்து ஓரம் கட்டிவிடமுடியாது எனவும் அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாநகர சபையில் தனது தலைமையின் கீழ்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாநகர சபை எதிர்கட்சி உறுப்பினர்கள் இயங்க முடியும் என்றும் தலைமைத்துவத்துக்கு கட்டுப்படாதவர்கள் மீது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளின் தாக்குதல் திட்டங்கள் தகவலை மறைத்தவருக்கு சிறை

புலிகளின் தாக்குதல் திட்டங்கள் தொடர்பான தகவல்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சியில் வசிக்கும் ஒருவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் வசிக்கும் அறுபத்தியொரு வயதான கல்யாணி ராசய்யா அல்லது மீபே அய்யா என்ற பெயரில் அழைக்கப்படும் ஒருவருக்கே பிரஸ்தாப கடூழியச் சிறைத் தண்டனை கொழும்பு உயர்நீதி மன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

2007 ஜனவரி தொடக்கம் 2009 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் கொழும்பில் தாக்குதல்களை மேற்கொள்ளும் நோக்குடன் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான சத்யா, ஜெகன் அல்லது மன்னன் என்றழைக்கப்படுவோர் நாசகார வேலைகளில் ஈடுபடவுள்ளமை குறித்து அறிந்திருந்தும் அத்தகவல்களை பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை என்ற காரணத்தினாலேயே ராசய்யாவுக்கான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ராசய்யா ஏற்றுக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜெயலலிதாவின்...

தேர்தலை அரசாங்கம் மிகப் பெரியதேர்தலாகக் கருத்தில் எடுத்து தேர்தல் வியுகங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றது.

இவ்வாறு இத்தேர்தலை வென்றுவிடவேண்டும் என்று துடிப்பதற்கு அபிவிருத்தி என்பதற்கு அப்பால் இருக்கின்ற அரசியல் காரணங்களை தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் முடிவு என்பது மற்றொன்றின் ஆரம்பத்தை உருவாக்கியிருக்கின்றது. சர்வதேசத்தின் கவனம் அதன் ஊடாக இலங்கையில் குவிந்திருக்கின்றது.

தங்களின் போர்க்குற்றங்களை மறைத்து சர்வதேச நெருக்கடிகளில் இருந்து தவிர்த்துக் கொள்ள உள்ளூராட்சி சபை தேர்தல்களை அரசாங்கம் பயன்படுத்த முனைகின்றது.


இத்தகைய சூழ்ச்சி வலைகளில் எமது மக்கள் சிக்காது இருப்பதே நிரந்தர விடிவுநோக்கிய பயணத்திற்கு வாய்ப்பாக அமையும் எனச் சிறிதரன் எம்.பி. பேசினார்.

### செய்திப்பாணம்

**ஐந்தாயிரம் ரூபாத்தாள் அரசாங்கம் பதிப்பித்தும் பிந்தாமல் கள்வர் பதிப்பித்தார் - முந்தியாம் முந்திரிகைக் கொட்டையா முழுதுமாக அகப்பட்டே கந்தறுந்த கதைதான் இது!**



# இலங்கைக்கு நெருக்கடி நேர்ந்தால் கைகொடுத்து உதவ வியட்நாம் தயார்



(கொழும்பு)

இலங்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் வரும் எந்தவொரு வேளையிலும் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாக வியட்நாம் அறிவித்துள்ளது.

இலங்கை தற்போது எதிர் கொண்டு வரும் பிரச்சினைகள் குறித்து வியட்நாம் அவதானித்து வருவதாக இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டொன் சின் டா தெரிவித்துள்ளார்.

பிரதமர் டி.மு.ஜயரட்னவை நேற்று மாலை அவரது இல்லத்தில் வைத்து சந்தித்தபோதே வியட்நாம் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

வியட்நாம் வர்த்தகர்கள் பல துறைகளில் இலங்கையில் முதலீடு செய்யக் காத்திருப்பதாக வியட்நாம் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் வியட்நாமிற்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



தேசத்தின் வளர்ச்சிக்காக 50 ஆண்டுகள் அளப்பரிய பங்காற்றிய மக்கள் வங்கியின் பொன் விழா நிகழ்வுகள் நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இதில் 1000 ரூபா நாணயக் குற்றி வெளியிடப்பட்டபோது...

# பான் கீ மூனுடன் ரணில் இன்று சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாளைய தினம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்திக்கவுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன் தினம் அமெரிக்க உயரதிகாரிகள் சிலரை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாகவும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நடவடிக்கை காரியாலயத்திற்கான பிரதி துணைச் செயலாளர் அலிசியா அயர்சை நேற்று சந்தித்து கலந்துரையாடிய ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் சமகால அரசியல் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்ததாகவும் தெரியவருகிறது.

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமாதானத்துக்கும், நல்லிணக்கத்திற்குமான பணியகம் சர்வதேச சமாதான தினத்தை முன்னெடுக்கும் வகையில் நடத்தி வருகின்ற நிகழ்வுகளில் நாளை இளவாலை ஊர்த்து அன்னை ஆலய முன்றலில் முற்பகல் 9.30 மணியளவில் கிராம மட்ட இளைஞர்களுக்கான ஒன்றுகூடல் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

## செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 9 இற்கு வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலையிலுள்ள ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடநூலையும் எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

## பொலிஸாரின் சடலம் கொழும்பில் மீட்பு

(கொழும்பு)

அமைச்சுக்களின் விசேட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடைய சடலம் நேற்றுக் காலை பொரளை கொட்டா வீதியில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்த விசாரணைகள் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன.

# நினைவுப் பேருரை

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடாத்தும் மில்க் வைற் தொழிலதிபர் அமரர் க.கனகராசா (ஜே.பி) நினைவுப் பேருரை இன்று சனிக்கிழமை இலக்கம் 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சைவப்புலவர் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். சிவநேசச் செல்வர் இ.தவகோபாலன் பதிலுரை வழங்குவார். (10)

## தங்காலையில் துப்பாக்கிச்சூடு பிரதேச சபைத் தலைவர் தப்பிப் பிழைத்தார்

(கொழும்பு)

தங்காலை பிரதேச சபைத் தலைவர் பயணித்த வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் அதில் பயணித்த எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என பெலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் விதாரனதெனிய சந்தியில் வைத்து துப்பாக்கிச் சூட்டை நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாதுகாப்பு ஊழியர்களுக்கு சிறப்பு சீருடை அணியப் பணிப்பு

(கொழும்பு)

அனைத்து நிறுவனங்களில் பணி புரியும் தனியார் பாதுகாப்பு ஊழியர்களும் நேற்று முதல் பொதுவான சீருடை ஒன்றை அணியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இச்செயற்திட்டமானது பாதுகாப்பு அமைச்சின் வழிநடத்தலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயக் காப்புறுதிக்கு ஜனாதிபதி நிதி ஒதுக்கீடு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்ற வகையில் முன்வைத்த ஆலோசனைக்கு ஏற்ப விவசாயிகளுக்கு ஓய்வூதியம் மற்றும் பயிர்ச்செய்கை பாதிப்புக்கான காப்புறுதி நட்டஈடு வழங்க 317.3 மில்லியன் ரூபாவை ஒதுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு இந்த நிதி ஒதுக்கப்படுகின்றது.

விவசாயிகளுக்கான உத்தேச புதிய ஓய்வூதிய நிதியம் நிறுவப்படும் வரை விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை ஊடாக இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

# வீதிக்கு விமோசனம்

பல வருடங்களாகச் சேதமடைந்து பாவனைக்கு உதவாமல் இருந்து வந்த கஸ்தூரியார் வீதி யாழ்.இந்து சிறுவர் பாடசாலைப் பகுதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

மழை காலங்களில் இந்தப் பகுதி குளத்தைப் போன்று காட்சிதந்து வந்தது. அந்தளவுக்கு நிலத்தடி கற்களும் சிதறுப்பட்டு குழி தோன்றி இருந்தன.

அதற்குக் காட்டுக் கற்கள் போட்டு வீதியை உயர்த்தி வீதி செப்பனிடப்படுகிறது. அதனால் பல வருடங்களாக அவ்வீதியைப் பயன்படுத்தி வந்த மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

குறிப்பாக யாழ். இந்து சிறுவர் பாடசாலை மற்றும் அப்பகுதியில் இயங்கிவருகின்ற தனியார் கல்விக்கூடம் ஆகியவற்றில் கல்வி கற்க வந்துசெல்லும் மாணவ மாணவிகளும் அவர்களைக் கூட்டிவந்து கூட்டிச் செல்லும் பெற்றோரும் வீதியைப் புனரமைத்து வருகின்றவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து வருகின்றனர். (68)

## அலுவலக செய்தியாளர்கள் தேவை

எமது பத்திரிகை நிறுவனத்தில் அலுவலக செய்தியாளராகப் பணியாற்றுவதற்கு அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் –

- யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பது விரும்பத்தக்கது. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- தமிழ் மொழியில் திறமையும் ஆங்கில/சிங்கள அறிவும் விரும்பத்தக்கது.
- பத்திரிகை நிறுவனங்களில் செய்தியாளராகப் பணியாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகைத் துறையில் அதீத ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- வெளிக்கள வேலையில் ஈடுபடத்தக்க உடல் ஆரோக்கியம் உள்ள 35 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக செய்தியாளருக்கான விண்ணப்பம்' என்று தவறாமல் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர்

**'ஆளணி முகாமையாளர்'**

**'தினமுரசு' இல 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

# இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தியது இலங்கை

(லீட்ஸ்)

இங்கிலாந்து அணிக்கெதிரான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 69 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது. ஹெடிங்லேயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 309 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய மஹேல ஜயவர்தன மிகச்சிறப்பாக ஆடி 144 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரின் 14 ஆவது ஒருநாள் சதமாகும். குமார் சங்கக்கார 69 ஓட்டங்களையும் ஏஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் பெற்றனர். ஜெயவர்த்தனவும் சங்கக்காரவும் 3 ஆவது விக்கெட்டுக்காக 159 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றமை சிறப்பம்சமாகும்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.5 ஓவர்களில் 240 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

லக்மால், ரந்தீவ் இருவரும் தலா 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஜீவன் மெண்டிஸ் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஜயவர்த்தன தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட இத் தொடரில் இரு அணிகளும் 1-1 விகிதத்தில் சமநிலையில் உள்ளன. 3 ஆவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.